ISSN: 2582–5518

பேக்கரி மஹாராஜ
No.9,மார்த்தாண்டபுரம் முதல் தெரு, புதுக்கோட்டை - 622 001.
Customer Service : 9655662206
www.bakerymaharaj.com fssai 12420016000073

புதுகை
# வரலாறு
நாளிதழ்
WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351

வணக்கம் புதுக்கோட்டை
India's most trusted jeweller
ஸ்ரீ குமரன் தங்கமாளிகை
T.S.no : 2708, வடக்கு ராஜ வீதி. புதுக்கோட்டை- 622 001
Ph: 04322 220206



## கையிருப்பில் ரூ.240.99 கோடி மதிப்பிலான மருந்துகள்; வாருங்கள் ஆய்வு செய்வோம்

# அழைப்பு

## 2013 ஆம் ஆண்டுக்கு பிறகு 10 ஆண்டுகளில் தமிழகத்துக்கு கிடைத்த மொத்த விருதுகள் எண்ணிக்கை 549. ஆனால் கடந்த ஓராண்டில் மட்டும் தமிழகத்துக்கு கிடைத்த விருதுகள் எண்ணிக்கை 310 : இபிஎஸ்ஸுக்கு மா.சுப்பிரமணியன் பதிலடி



சென்னை , நவ. 15–

"தற்போது ரூ.240.99 கோடி மதிப்பிலான மருந்துகள் கையிருப்பில் உள்ளன. இதற்கு பிறகும் எடப்பாடி பழனிச்சாமிக்கு மருந்துகள் தட்டுப்பாடு இருக்கிறது என்ற சந்தேகம் இருக்குமேயானால் வாருங்கள், நானும் உடன் வருகிறேன், நேரடியாக சென்று ஆய்வு செய்வோம்" என்று மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "எதிர்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிச்சாமி தமிழகத்தில் மருந்துகள் மற்றும் மருத்துவர்கள் தட்டுப்பாடு நிலவுகிறது என்கின்ற வகையில் அறிக்கை வெளியிட்டிருந்தார். அதற்கு நான் அவரிடம் தட்டுப்பாடு எங்கு நிலவுகிறது என்று தெரிவித்தால், அதனை நிவர்த்தி செய்து தருவதாகவும் தெரிவித்திருந்தேன். மேலும், தமிழ்நாடு மருந்து சேவை கழகத்தின் மூலம் (Tamilnadu Medical Service Corporation) தமிழகத்தில் மருந்துகள் இருப்பு நிலவரம் குறித்து அறிக்கை வெளியிட்டிருந்தேன். ஆனால் இதனை கருத்தில் கொள்ளாமல் இன்றும் எடப்பாடி பழனிச்சாமி அறிக்கை வெளியிட்டிருக்கிறார்.

தமிழக முதல்வரின் தலைமையிலான அரசின் சிறந்த செயல்பாடுகளின் காரணமாக தமிழ்நாடு மருத்துவத் துறை பல்வேறு விருதுகளை கடந்த ஓராண்டாக வாங்கி வருகிறது. 2013 ஆம் ஆண்டு முதல் தேசிய தர உறுதி நிர்ணய திட்ட விருது (NQAS National Quality Assurance Standards Certificate) வழங்கப்பட்டு வருகிறது. 2013 ஆம் ஆண்டுக்கு பிறகு 10 ஆண்டுகளில் தமிழகத்துக்கு கிடைத்த மொத்த விருதுகள் எண்ணிக்கை 549 ஆகும். ஆனால் கடந்த ஓராண்டில் மட்டும் தமிழகத்துக்கு கிடைத்த விருதுகள் எண்ணிக்கை 310 ஆகும்.

அதே போல் மகப்பேறு அறை, கர்ப்பிணிகளுக்கான அறுவை அரங்கின் தரம் உயர்த்தும் திட்ட சான்றிதழ் (LaQshya Labour Room Quality Improvement Initiative) 2017 ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருகிறது. இதன் கீழ் 6 ஆண்டுகளில் பெறப்பட்ட ஒட்டு மொத்த சான்றிதழ்கள் 79 ஆகும். இதில் இந்த ஆண்டு மட்டும் 45 சான்றிதழ்கள் பெறப்பட்டுள்ளது. இதனை எடப்பாடி பழனிச்சாமி தெரிந்துக்கொள்ள வேண்டும். மேலும், அவர் சுய பரிசோதனை செய்து கொள்ள வேண்டும்.

நான் முன்னரே கூறியது போல் நீங்கள் 10 ஆண்டுகளில் இந்த மாநிலத்தில் எத்தனை முறை சுற்றி வந்திருக்கிறீர்கள், எத்தனை மலைக்கிராமங்களில் உள்ள மருத்துவமனைகளுக்கு சென்றிருக்கிறீர்கள், எத்தனை ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு நீங்களோ அல்லது உங்கள் அமைச்சர்களோ சென்றிருக்கிறீர்கள், நாங்கள் எத்தனை முறை இதைசெய்திருக்கின்றோம் என்று தெரிந்து கொண்டு, இதுகுறித்து எங்களிடம் நேரிடையாக விவாதிக்க தயாரா?. ஆகையால் எடப்பாடி பழனிச்சாமி ஆகிய நீங்களோ அல்லது உங்களை சார்ந்த ஒருவரோ சட்டமன்றம் நடக்கும்போதுஇதுகுறித்து பேசலாம். சட்டமன்றம் நடக்காதபோது எங்கேயோ ஒரு இடத்தில் ஒளிந்துக்கொண்டு பேசுவது எதிர்கட்சித் தலைவருக்கு அழகல்ல.

எடப்பாடி பழனிச்சாமி மருந்து மாத்திரைகள் 30 நாட்களை கடந்தும் இல்லை என்று அறிக்கை விட்டு இருக்கிறார். தமிழ்நாடு மருத்துவ சேவைகள் கழகம் (TNMSC) என்று சொல்லக்கூடிய தமிழ்நாடு மருத்துவ சேவைகள் கழகத்தின் சார்பில் ஒவ்வொரு வருடத்துக்கும் எவ்வளவு மருந்துகள் வாங்கப்படுகிறது என்று பார்த்தோமேயானால் 313 அத்தியாவசிய மருந்துகள் வாங்கப்படுகிறது, 234 வகையான மருத்துவ அறுவை மற்றும் தையல் உபகரண சாதனங்கள், 326 சிறப்பு மருந்துகள் மற்றும் 7 ரத்தம் உறைதல் சம்பந்தப்பட்ட மருந்துகள் அனைத்தும் கொள்முதல் செய்யப்பட்டு ஏழை மக்களுக்கு தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது.

தற்போதுகையிருப்பில் உள்ள மருந்துகள் தொகை ரூ. 240.99 கோடி ஆகும். இதற்கு பிறகும் எடப்பாடி பழனிச்சாமிக்கு மருந்துகள் தட்டுப்பாடு இருக்கிறது என்ற சந்தேகம் இருக்குமேயானால் வாருங்கள், நானும் உடன் வருகிறேன், நேரடியாக சென்று ஆய்வு செய்வோம். என்று அவர் கூறியுள்ளார்.

முன்னதாக, திமுக அரசு பொறுப்பேற்றது முதலே, அரசு மருத்துவமனைகளில் முக்கியமான மருந்துகளின் பற்றாக்குறை துவங்கிவிட்டது என்றும், நோயாளிகளை மருந்துகளுக்காக அலையவிட்ட திமுக அரசைப் பற்றியும், சுகாதாரத்துறைமந்திரியின் அலட்சியம் பற்றியும் பலமுறை அறிக்கைகள் வாயிலாகவும், சட்டமன்றத்திலும், பேட்டிகளின் வாயிலாகவும் நான் தெரிவித்த பின்பும், இன்றும் நோயாளிகள் மருந்துகளுக்காக தவிக்கும் போக்கு தொடர்ந்து வருகிறது, என்று அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி அறிக்கை வெளியிட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

## புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரக வளாகத்தில்

# குழந்தைகளுக்கான விழிப்புணர்வு நடைபயணத்தினை கலெக்டர் கொடியசைத்து துவக்கி வைத்தார்



புதுக்கோட்டை , நவ. 15–

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரக வளாகத்தில், சமூக பாதுகாப்புத்துறை, மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு சார்பில், நவம்பர்-14 தேசிய குழந்தைகள் தினம், நவம்பர்-19 உலக குழந்தைகளுக்கு எதிரான வன்கொடுமை தடுப்பு தினம், நவம்பர்-20 சர்வதேச குழந்தைகள் தினத்தை முன்னிட்டு, குழந்தைகளுக்கான விழிப்புணர்வு நடைபயணத்தினை, மாவட்ட ஆட்சித்தலைவர் மெர்சி ரம்யா,நேற்று கொடியசைத்து துவக்கி வைத்தார்.

பின்னர் அவர் தெரிவித்ததாவது ; தமிழ்நாடு முதலமைச்சர் குழந்தைகளின் நலனில் மிகுந்த அக்கறைகொண்டு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார். அந்தவகையில் குழந்தைகளின் கல்வி, சமூக தீர்வுகள் உள்ளிட்டவைகளை தீர்க்கும் வகையில் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அந்தவகையில் இன்றையதினம் குழந்தைகள் பாதுகாப்பு, குழந்தைகள் உரிமைகள், குழந்தைகள் தொடர்புடைய சட்டங்கள் குறித்து விழிப்புணர்வு நடைபயணம் கொடியசைத்து துவக்கி வைக்கப்பட்டது.

இந்த நடைபயணமானது, புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரக வளாகத்தில் தொடங்கி, கலைஞர் கருணாநிதி அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் முடிவடைந்தது. இப்பேரணியில் குழந்தைகளை பாதுகாப்போம் வளமான சமுதாயத்தை உருவாக்குவோம், அழைப்போம் அழைப்போம் போக்சோ சட்டம் புகாரை பதிவு செய்ய 1098-ஐ அழைப்போம், குழந்தைகள் வருமானம் பெற்றோர்களுக்கு அவமானம் ஆகிய வாசகங்கள் அடங்கிய பதாகைகளை 350 மாணவிகள் கையில் ஏந்தியபடி கலந்துகொண்டனர். அதனைத்தொடர்ந்து ஸ்ரீ பிரகதாம்பாள் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் நாட்டுப்புற கலைஞர்களை கொண்டு குழந்தைகள் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு குறித்து விழிப்புணர்வு வீதி நாடகம் நடைபெற உள்ளது.

எனவே மாணவ, மாணவிகள் அனைவரும் தமிழக அரசின் உரிய வழிகாட்டி நெறிமுறைகளை பின்பற்றி கல்வியில் மட்டுமல்லாமல், சமூகத்திலும் சிறந்த விளங்கிட வேண்டும் என தெரிவித்தார்.

இந்நிகழ்வில், மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் மஞ்சுளா, மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் வசந்தகுமார், மாவட்ட சமூகநல அலுவலர் கோகுலப்பிரியா மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

27-ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் : 25.01.1977
மறைவு : 15.11.1996
R.R.பழநி M.B.B.S.,
எங்களை விட்டு பிரிந்து சென்றாலும்
எங்கள் இதயங்களில் நீங்காது என்றும் நிலைத்து இருக்கும்
எங்கள் இதய தெய்வத்திற்கு கண்ணீர் அஞ்சலியை காணிக்கை ஆக்குகிறோம்.
...உன் பிரிவால் வாடும் உள்ளங்கள்...
Dr. C.ராஜமாணிக்கம் M.S.,( தகப்பனார் )
R.சரஸ்வதி ராஜமாணிக்கம் ( தாய் )
Dr. K.ஆனந்த் M.B.B.S.,M.S., MCh., (SGE) ( மைத்துனர் )
Dr. R.அபிராமி கற்பகம் M.B.B.S., M.D., (OG) DRM ( GERMANY )
செல்வன் : K.A.ராஜேஸ்வர்கார்த்திக் செல்வி : K.A.தன்வி
மற்றும் ஊழியர்கள்
ஸ்ரீ மீனாட்சி மல்டி ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை
தெற்கு 4ம் வீதி, புதுக்கோட்டை.

## "மோடியின் உத்தரவாதத்துக்கு முன் தங்கள் வாக்குறுதி நிற்காது என்பதை காங்கிரஸ் ஒப்புக்கொண்டு விட்டது" : பிரதமர் பேச்சு



பேட்டுல் (மத்தியப் பிரதேசம்), நவ. 15–

மோடியின் உத்தரவாதத்துக்கு முன் தங்களின் வாக்குறுதிகள் நிற்காது என்பதை காங்கிரஸ் ஒப்புக்கொண்டு விட்டதாக பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

மத்தியப்பிரதேசத்தில் வரும் 17 ஆம் தேதி சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெற உள்ள நிலையில், அம்மாநிலத்தின்பேட்டுல் நகரில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரப் பொதுக்கூட்டத்தில் பிரதமர் நரேந்திர மோடி நேற்று உரையாற்றினார். பாஜகவேட்பாளர்களை ஆதரித்துப் பேசிய அவர், "இந்தத் தேர்தலில் தங்களால் வெற்றி பெற முடியாது என்பதை காங்கிரஸ் ஒப்புக்கொண்டுவிட்டது. அதன் காரணமாகவே, அக்கட்சியின் தலைவர்களை பிரச்சாரங்களில் பார்க்க முடிவதில்லை.

மத்தியப்பிரதேசத்தின் கஜானாவில் காங்கிரஸ் கை வைப்பதை தடுக்கும் தேர்தல் இது. எப்படியெல்லாம் காங்கிரஸ் ஊழல் செய்தது என்பதை மக்கள் நினைத்துப் பார்க்க வேண்டும். எப்போதெல்லாம் காங்கிரஸ் ஆட்சிக்கு வந்ததோ அப்போதெல்லாம் வளர்ச்சி தடைபட்டுள்ளது. தேர்தல் நாள் நெருங்கிவிட்டது.

காங்கிரஸ் கட்சி அம்பலப்பட்டுவிட்டது. முழு மத்தியப் பிரதேசத்தில் இருந்தும் கிடைத்துள்ள செய்தி என்னவென்றால், தங்கள் தோல்வியை காங்கிரஸ் ஏற்றுக்கொண்டுவிட்டது என்பதும், அதிர்ஷ்டத்தை மட்டுமே தற்போது அவர்கள் நம்புகிறார்கள் என்பதுமே.

காங்கிரஸ் கட்சியின் சில தலைவர்கள் பிரச்சாரத்திற்குவெளியே வராமல் வீட்டிலேயே இருக்கிறார்கள். வெளியே செல்வதற்கு அவர்களுக்கு விருப்பம் இல்லை. மக்களிடம்என்னகூறுவது என்று அவர்களுக்குத் தெரியவில்லை. தங்களின் போலி வாக்குறுதிகள், நரேந்திர மோடியின் உத்தரவாதத்துக்கு முன் நிற்காது என்பதை அவர்கள் ஒப்புக்கொண்டு விட்டார்கள்.

ஜம்மு காஷ்மீரில் சட்டப்பிரிவு 370 ஒருபோதும் ரத்து செய்ய முடியாது எனக்கூறி வந்த கட்சி காங்கிரஸ். தற்போது அந்த பிரிவை பாஜக தலைமையிலான அரசு நீக்கிவிட்டது. அதேபோல், அயோத்தியில் ராமர் ஆலயம் அமைக்க வாய்ப்பே இல்லை என கூறி வந்த காங்கிரஸ் கட்சி, தற்போது எப்போது கட்டுமானம் நிறைவடையும் என கேட்கத் தொடங்கி இருக்கிறது" என்று பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்தார்.

# இன்று

# 15-11-2023

சக வருடம் 1945 கார்த்திகை 24

காலை ஆரஞ்சு தோல் காயவைத்து தேய்த்து குளித்து வந்தால் சரும நோய்கள் தீரும்

| | | | |
|---|---|---|---|
| சோபகிருது ஐப்பசி 29 | NOV - WED புதன் | ஜமாஅத்துல் அவ்வல் 1 | வளர்பிறை 319 / 046 |

வளர் துவிதியை 21.06 (மா. 02.40) கேட்டை 55.42 (கா. 04.31) தியாஜ் 10.16 அகஸ் 28.58 சித்த 55.42 மேல் மரண. எமத்துவிதியை. திருஇந்துளூர் பரிமள ரெங்கராஜர் வெண்ணெய்த்தாழி சேவை. சிக்கல் சிங்காரவேலவர் காலை மோகனாவதாரம். இரவு தங்க மயில் வாகனத்தில் புறப்பாடு.

| | நல்லநேரம் | கௌரி நல்ல | இராகு | குளிகை | எமகண்டம் |
|---|---|---|---|---|---|
| காலை | 9.00-10.00 | 1.45-2.45 | 12.00 | 10.30 | 07.30 |
| மாலை | 4.45-5.45 | 6.30-7.30 | 01.30 | 12.00 | 09.00 |

சூலம்: வடக்கு பரிகாரம்: பால் | துலா லக்கனம் இருப்பு நா. 0 வி. 20 | சந்திராஷ்டமம் கார்த்திகை

கரணம்: 6-7.30 | சூரிய உதயம்: 6.14

எங்கே புகையுண்டோ அங்கே நெருப்பு உண்டு

இராசிபலன்
மேஷம் - ஆர்வம்
ரிஷபம் - ஏமாற்றம்
மிதுனம் - வரவு
கடகம் - வருத்தம்
சிம்மம் - வெற்றி
கன்னி - முயற்சி
துலாம் - போட்டி
விருச்சி - லாபம்
தனுசு - நன்மை
மகரம் - சுகம்
கும்பம் - கவனம்
மீனம் - மேன்மை

## சிந்திப்போம்.... செயல்படுவோம்







## "கூட்டுறவு சங்கப் பணியிடங்களை வேலைவாய்ப்பு அலுவலகம் மூலம் நிரப்புக" – அண்ணாமலை வலியுறுத்தல்

சென்னை, நவ. 15–

கூட்டுறவு சங்கப் பணியிடங்களை வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்துள்ளவர்களைக் கொண்டு நிரப்ப வேண்டும் என்று தமிழக அரசை, பாஜக மாநில தலைவர் அண்ணாமலை வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அண்ணாமலை வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், "தமிழகத்தில் கூட்டுறவு துறையின் கீழ் இயங்கி வரும் கூட்டுறவு சங்கங்களில் 2,257 உதவியாளர் மற்றும் இளநிலை உதவியாளர் காலிப்பணியிடங்களை நிரப்புவதற்கான அறிவிப்பு வெளியாகி உள்ளது. நேற்றைய நாளிதழில், அரசு வேலைவாய்ப்பு அலுவலகத்தில் சுமார் 64 லட்சம் இளைஞர்கள் பதிவு செய்து காத்திருக்கிறார்கள் என்ற செய்தி வெளிவந்திருக்கிறது.



அவர்களிலிருந்து தகுதியானவர்களைத் தேர்ந்தெடுக்காமல், எதற்காக கூட்டுறவுத் துறை பணியிடங்களுக்கு நேரடி விண்ணப்பம் கோரப்படுகிறது?

கூட்டுறவு நிறுவனங்களுக்கு தேர்தல் நடந்து அவர்களின் கண்காணிப்பில்தான் பணியிடங்கள் நிரப்பப்படவேண்டும். ஆனால், கூட்டுறவு நிறுவனங்களுக்கு தேர்தல் நடத்தாமல், அவசர அவசரமாக பணியிடங்களை நிரப்ப விண்ணப்பம் கோருகின்றனர். அரசுப் பணியிடங்களை நிரப்ப லஞ்சம் வாங்கியதால்தான் திமுகவின் ஒரு அமைச்சரே சிறையில் இருக்கிறார். மீண்டும் அதுபோல மிகப் பெரிய அளவில் முறைகேடு நடத்த திமுக திட்டமிட்டுள்ளதோ என்ற சந்தேகம் எழுகிறது.

லட்சக்கணக்கான இளைஞர்கள் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து காத்திருக்கும்போது, அவர்களைப் புறக்கணித்து, அரசுப் பணிகளை தங்களுக்கு வேண்டப்பட்டவர்களுக்கு வழங்க முயற்சிப்பதை, திமுக நிறுத்திக்கொள்ள வேண்டும். கூட்டுறவு சங்கங்களுக்கான தேர்தலை உடனே நடத்த வேண்டும் என்றும், வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்துள்ள தகுதியான இளைஞர்களுக்கு இந்தப் பணிகளில் முன்னுரிமை கொடுக்க வேண்டும் என்றும் தமிழக பாஜக சார்பாக வலியுறுத்துகிறேன்" என்று அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

## அரசு வழக்கறிஞர்களை சந்திக்க வரும் போலீஸாரை மரியாதையுடன் நடத்த வேண்டும்

சென்னை, நவ. 15–

உயர் நீதிமன்றம் மற்றும் கீழமை நீதிமன்றங்களில் அரசு குற்றவியல் வழக்கறிஞர்களை வழக்கு நிமித்தமாக சந்திக்க வரும் போலீஸ் அதிகாரிகளை மரியாதை குறைவாக நடத்தக்கூடாது என மாநில அரசு தலைமை குற்றவியல் வழக்கறிஞர் அறிவுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக மாநில அரசு தலைமை குற்றவியல் வழக்கறிஞர் அசன் முகமது ஜின்னா சென்னை உயர் நீதிமன்றம் மற்றும் உயர் நீதிமன்ற மதுரை கிளை மற்றும் கீழமை மாவட்ட நீதிமன்றங்களில்



உள்ள அரசு குற்றவியல் வழக்கறிஞர்களுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் கூறியிருப்பதாவது:

அரசு குற்றவியல் வழக்கறிஞர்களை பணி நிமித்தமாக சந்திக்க வரும் போலீஸ் அதிகாரிகளை சில அரசு வழக்கறிஞர்கள் மரியாதை குறைவாக நடத்துவதாகவும், ஒருமையில் பேசி திட்டுவதாகவும் தெரியவந்துள்ளது.

இதுபோன்ற செயல்கள் வருந்தத்தக்கது. ஒரு சிலர் இதுபோல செய்யும் செயல்களால் ஒட்டுமொத்த அரசு வழக்கறிஞர்களுக்கும் அவப்பெயர் ஏற்படுகிறது. வழக்கு நிமித்தமாக சந்திக்க வரும் போலீஸ் அதிகாரிகளை அரசு வழக்கறிஞர்கள் கண்ணியத்துடன் நடத்த வேண்டும். அவர்களது பணிச்சுமை மற்றும் மனஉளைச்சலை கருத்தில் கொண்டு மனிதநேயத்துடன் நடத்த வேண்டும் என்று அந்த கடிதத்தில் அறிவுறுத்தியுள்ளார்.




## புதுக்கோட்டை பகுதியில் நாளை மின் நிறுத்தம்

புதுக்கோட்டை, நவ.15–

இராஜ கோபாலபுரம், பெரியார் நகர், மற்றும் பெருமாநாடு, திருவரங்குளம், பகுதியில் நாளை மின்சார விநியோகம் இருக்காது.

புதுக்கோட்டை 110/22 கி.வோ துணை மின் நிலையத்தில், மாதாந்திர பராமரிப்பு பணிகள் நடைபெற இருப்பதால் வருகிற நவம்பர் 16ம் தேதி வியாழக்கிழமை காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை இராஜகோபாலபுரம், கம்பன் நகர், பெரியார் நகர், பூங்கா நகர், கூடல் நகர், லெட்சுமி நகர், பாரி நகர் சிவகாமி ஆச்சிநகர், சிவபுரம், தேக்காட்டூர், கவிநாடு, அகரப்பட்டி,



பெருமாநாடு, திருவரங்குளம், வல்லத்திராக்கோட்டை, நச்சாந்துப்பட்டி, நமணசமுத்திரம், கனக்கம்பட்டி, அம்மையாப்பட்டி, ஆட்டாங்குடி, கடையக்குடி, லேணாவிலக்கு, எல்லைப்பட்டி, செல்லுக்குடி மற்றும் பெருஞ்சுனை ஆகிய பகுதிகளில் மின் விநியோகம் இருக்காது என தமிழ்நாடு மின் வாரிய உதவி செயற் பொறியாளர் ச.கண்ணன் தெரிவித்துள்ளார்.

## இந்திய எல்லையில் அத்துமீறி பறந்த 82 பாகிஸ்தான் ட்ரோன்கள் பறிமுதல்

புதுடெல்லி, நவ. 15–

கடந்த 2019–ம் ஆண்டு முதல் இதுவரை இந்திய எல்லைப் பகுதிகளில் அத்து மீறி பறந்த 82 பாகிஸ்தான் ட்ரோன்கள் பறிமுதல் செய்யப்பட்டு உள்ளன. பாகிஸ்தானின் ட்ரோன் அச்சுறுத்தல் குறித்து இந்திய ராணுவ வட்டாரங்கள் கூறியதாவது :

கடந்த 2019 முதல் இதுவரை இந்திய எல்லைப் பகுதிகளில் அத்து மீறி பறந்த 82 பாகிஸ் தான்ட்ரோன்களை சுட்டு வீழ்த்தி பறிமுதல் செய்துள்ளோம். 593 முறைஎல்லைப் பகுதிகளில் ட்ரோன்கள் பறப்பது கண்டறியப்பட்டது.

கடந்த ஓராண்டில் மட்டும்ட்ரோன்கள் மூலம் இந்திய பகுதிகளுக்குள் வீசப்பட்ட 317 கிலோபோதைப் பொருள், 10 கிலோவெடிபொருட்கள், 512 ஆயுதங்கள், 56 குண்டுகள், 12 ஏகே ரக துப்பாக்கிகள், 128 கைத்துப்பாக்கிகள், ரூ.18 லட்சம் ஆகியவற்றை பறிமுதல் செய்துள்ளோம்.

காஷ்மீர் தீவிரவாதிகளுக்கும்



காலிஸ்தான் பிரிவினைவாதிகளுக்கும் பாகிஸ்தானின் ஐஎஸ்ஐ உளவு அமைப்பு ட்ரோன்கள் வாயிலாக ஆயுதங்கள், போதைப்பொருட்களை விநியோகம் செய்து வருகிறது.

பாகிஸ்தானின் ட்ரோன் அச்சுறுத்தலை எதிர்கொள்ள எல்லை பாதுகாப்புப் படை வீரர்கள் ட்ரோன் தடுப்பு தொழில்நுட்பத்தை பயன்படுத்தி வருகின்றனர். பஞ்சாபுக்குள் ட்ரோன்கள் வாயிலாகபோதை பொருட்கள் கடத்தப்படுவதை தடுக்க அந்த மாநில போலீஸார் சிறப்பு படையை உருவாக்கி உள்ளனர். ட்ரோன் விவகாரம் தொடர்பாக பஞ்சாபில் இதுவரை 30 பேர் கைது செய்யப்பட்டனர்.

ட்ரோன் அச்சுறுத்தலை எதிர்கொள்ள 10 மாநில போலீஸார், 3 மத்திய பாதுகாப்புப் படை வீரர்களுக்கு ட்ரோன்களை சுட்டு வீழ்த்துவது தொடர்பாக தேசிய பாதுகாப்புப் படை சார்பில் சிறப்பு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

எல்லை பாதுகாப்புப் படை சார்பில் ட்ரோன்களை வீழ்த்தசிறப்பு துப்பாக்கிகள் பயன்படுத்தப்படுகின்றன. இந்த துப்பாக்கிகள் மூலம் ட்ரோன்களை குறிவைத்து வலைகள் வீசப்படுகின்றன. வானில் பறந்து செல்லும் வலைகள், ட்ரோன்களின் இறக்கைகளை சுற்றி வளைத்து அவற்றை தரையில் விழச் செய்கின்றன.

மேலும் ஜாமர்கள் மூலம் ட்ரோன்களை இயக்குவோரின் தகவல் தொடர்பு துண்டிக்கப்பட்டு ட்ரோன்கள் கீழே விழ செய்யப்படுகின்றன. விமானப்படை ஹெலிகாப்டர்களில் ட்ரோன்களை சுட்டு வீழ்த்தும் சிறப்பு துப்பாக்கிகள் பொருத்தப்பட்டு ட்ரோன்கள் வேட்டையாடப்படுகின்றன. இதேபோலபாகிஸ்தானின் ட்ரோன் அச்சுறுத்தலை முறியடிக்க பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்று ராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## கேரளா : சிறுமியை பாலியல் வன்கொடுமைக்கு உட்படுத்தி கொலை செய்த இளைஞருக்கு மரண தண்டனை

கொச்சி, நவ. 15–

கேரளாவில் 5 வயது சிறுமியை கடத்தி பாலியல் வன்கொடுமை செய்து கொலை செய்த அசாஃபக் அலம் என்ற இளைஞருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

கேரளாவின் கொச்சி மாவட்டம், அலுவா பகுதியில் உள்ள மொகத் பிளாசாவில் பிஹாரைச் சேர்ந்த அசாஃபக் அலாம் (29) என்பவர் கடந்த ஜூலை மாதம் அறை எடுத்து தங்கியுள்ளார். இந்நிலையில், அருகில் வசித்த பிஹார் தொழிலாளர் குடும்பத்தைச் சேர்ந்த 5-வயது சிறுமியிடம் அசாஃபக் அலாம் கடந்த ஜூலை 28ம் தேதி சாக்லெட் வாங்கித் தருவதாக கூறி கடத்திச் சென்றுள்ளார். அன்று மாலை 7 மணியளவில் தங்களின் 5-வயது மகளை காணவில்லை என பிஹார் புலம்பெயர் தொழிலாளர் தம்பதியினர் அலுவா காவல் நிலையத்தில் புகார் அளித்தனர்.

இதையடுத்து சிறுமி வசிக்கும் பகுதியில் உள்ள சிசிடிவி கேமிராக்களின் பதிவை போலீஸார்



ஆய்வுசெய்த போது அசாஃபக் அலாம் என்ற இளைஞர் அழைத்துச் சென்றது தெரியவந்தது. இதையடுத்து அவரிடம் நடத்தப்பட்ட விசாரணையில், சிறுமியை கடத்தி கொலை செய்ததை ஒப்புக் கொண்டார். இதன் தொடர்ச்சியாக, அலுவா மார்க்கெட் குப்பை கிடங்கில் இருந்து சிறுமியின் உடல் மீட்கப்பட்டது.

இதையடுத்து, அசாஃபக் அலாம் போக்சோ சட்டம் மற்றும் இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 302ன் கீழ் கைது செய்யப்பட்டார். இந்த வழக்கு சிறப்பு நீதிபதி கே.சோமன் முன்னிலையில் விசாரணைக்கு வந்தது. வழக்கில் அரசுத் தரப்பு வழக்கறிஞர் மோகன்ராஜ் ஆஜராகி வாதாடினார். குற்றம் உறுதியாக நிரூபிக்கப்பட்டதை அடுத்து, நேற்று தண்டனை அறிவிக்கப்பட்டது.

அதன்படி, இந்திய தண்டனைச் சட்டம் 302ன் படி, அசாஃபக் அலாம் சாகும் வரை தூக்கிலிட நீதிபதி சோமன் உத்தரவிட்டார். அதோடு, குழந்தைக்கு காயங்களை ஏற்படுத்தியது, குழந்தையின் பிறப்புறுப்பில் காயம் ஏற்படுத்தியது ஆகிய குற்றங்களுக்காக சாகும்வரை சிறையில் அடைக்க நீதிபதி உத்தரவிட்டார். மேலும், போக்சோ சட்டத்தின் கீழ், சாகும்வரை சிறையில் அடைப்பதற்கும் உத்தரவிட்டார். குழந்தைகள் தினமான நேற்று இந்த தீர்ப்பு வழங்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

## போதை பொருள் புழக்கத்தை முற்றிலுமாக ஒழிக்க வேண்டும் : ஜி.கே.வாசன் வலியுறுத்தல்

*சென்னை : நவ. 15,*

*தமிழகத்தில் போதைப் பொருள் புழக்கத்தை காவல் துறை முற்றிலுமாக ஒழிக்க வேண்டும் என்று தமாகா தலைவர் ஜி.கே.வாசன் வலியுறுத்தியுள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது :*

*சென்னை அண்ணா நகரில் கஞ்சா போதையில் கார் ஓட்டிய விபத்தில் 2 பேர் உயிரிழந்துள்ளனர். 4 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர். இந்த செய்தி அதிர்ச்சி அளிக்கிறது. தமிழக இளைஞர்கள் மதுவுக்கும், கஞ்சாவுக்கும் அடிமையாகி மிக மோசமாக சீரழிந்து வருகின்றனர். கஞ்சா, மதுவால் நிகழும் கொலை, கொள்ளை, பாலியல் வன்கொடுமை ஆகியவை மனதைபதறவைக்கின்றன.*

*மதுவின் தாக்கம் பள்ளி, கல்லூரி மாணவர்கள் இடையே பரவக்கூடிய அபாயமும் ஏற்பட்டுள்ளது. இந்த விபரீதத்தை தமிழக அரசு*



*உணரவேண்டும். போதைப் பொருள் நடமாட்டம் கட்டுப்படுத்தப் பட்டுள்ளதாக அரசு தொடர்ந்து கூறிவருகிறது. ஆனால், நடைமுறையில் அவ்வாறு இல்லை என்பதற்கு தற்போது நடக்கும் கொலை, கொள்ளைகளே உதாரணம்.*

*எனவே, கஞ்சா பொருட்களின் புழக்கத்தை தமிழக காவல் துறை அடியோடு ஒழிக்க வேண்டும். இதன் விற்பனையாளர்களை இரும்புக்கரம் கொண்டு அடக்க வேண்டும். தமிழக அரசு இதை வெறும் வார்த்தையோடு மட்டுமின்றி, நடைமுறையில் உறுதிசெய்ய வேண்டும். இதன்மூலம், வருங்கால தமிழகம் போதையில்லா தமிழகமாகமலரவேண்டும் என்று ஜி.கே.வாசன் தெரிவித்துள்ளார்.*

## திமுக இளைஞரணி சார்பில் 234 தொகுதிகளில் 8,647 கி.மீ தூரம் வாகனப் பேரணி


சென்னை, நவ. 15–

திமுக இளைஞரணி சார்பில் கன்னியாகுமரியில் தொடங்கி தமிழகமெங்கும் 234 சட்டமன்ற தொகுதிகளையும் உள்ளடக்கிய வகையில் நடைபெற உள்ள பிரம்மாண்ட இரு சக்கர வாகன பிரச்சார பேரணியை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் இன்று தொடங்கி வைக்கிறார்.

### உதயநிதி இன்று தொடங்கி வைக்கிறார்

மாநில உரிமைகளை மீட்க அழைக்கிறார் உதயநிதி என்ற முழக்கத்தோடு திமுக இளைஞரணி சார்பில் இந்த பிரச்சார பயணம் மேற்கொள்ளப்படுகிறது. இதற்கு திமுக ரைடர்ஸ் குழு பக்கபலமாக களமிறங்கியுள்ளது.

நவம்பர் 15-ம் தேதி தொடங்கி உதயநிதி ஸ்டாலினின் பிறந்தநாளான நவம்பர் 27-ம் தேதி வரை இரு சக்கர வாகன பிரச்சார பேரணி நடைபெறும் வகையில் திட்டமிடப்பட்டுள்ளது. மொத்தம் 188 இரு சக்கர



வாகனங்கள் இந்த பிரச்சார பயணத்தில் ஈடுபடுத்தப்பட உள்ளன.

இதில் கலந்து கொள்பவர்களுக்கு மூன்று வேளையும் அறுசுவை உணவு, தங்குமிடம், தலைக்கவசம், கொள்கை முழக்க டி-ஷர்ட், வாகனக் கொடிக்கம்பம், டிராவல் பேக், முதலுதவி சிகிச்சை மெடிக்கல் கிட், சோப்பு, சீப்பு, பேஸ்ட் கிட், குடிநீர் என அனைத்து அடிப்படை வசதிகளும் திமுக இளைஞரணி சார்பில் செய்து கொடுக்கப்படுகிறது.

திமுக ரைடர்ஸ் குழுவில் இணைந்து தமிழகமெங்கும் இரு சக்கர வாகனப் பிரச்சாரப் பேரணியில் கலந்துகொள்ள விரும்புபவர்கள் ஷூ கட்டாயம் அணிய வேண்டும், கருப்பு அல்லது ஜீன்ஸ் பேண்ட் அணிய வேண்டும். ஓட்டுநர் உரிமத்தின் நகலைக் கொடுக்க வேண்டும். வாகன உரிமைச் சான்று நகல் கொடுக்க வேண்டும். வாகனக் காப்பீட்டு சான்று நகல் தரவேண்டும் என்பன உள்ளிட்ட இன்னும் சில நிபந்தனைகளும் விதிக்கப்பட்டுள்ளன.


இரு சக்கர வாகனப் பிரச்சார பேரணியை இன்று தொடங்கி வைப்பதற்காக நேற்று மாலையே அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கன்னியாகுமரி வந்தார். 13 நாட்களில் 8,647 கிலோ மீட்டர் தூரத்தை கடக்கும் வகையில் பயணத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

## வாக்காளர் பட்டியல் திருத்த சிறப்பு முகாம் நவ. 25, 26–ம் தேதிகளுக்கு மாற்றம் : தலைமை தேர்தல் அதிகாரி அறிவிப்பு

*சென்னை, நவ. 15–*

*தமிழக அரசால் வரும் நவ.18–ம்தேதி பணிநாளாக அறிவிக்கப்பட்டுள்ளதால் வாக்காளர் பட்டியல் சிறப்பு முகாம் நவ. 18, 19–க்கு பதில் 25 மற்றும் 26 தேதிகளில் நடத்தப்படும் என்று தமிழக தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரத சாஹு அறிவித்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது :*

*இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்தல்படி வரும் 2024 ஜனவரி 1-ம் தேதியை தகுதியேற்படுத்தும் நாளாக கொண்டு, புகைப்படத்துடன் கூடிய வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்தப்பணிகள் கடந்த அக். 27–ம்*



*தேதி முதல் தொடங்கி நடைபெற்று வருகின்றன.*

*இதன் ஒரு பகுதியாக வாக்காளர்கள் தங்கள் பெயரைச் சேர்க்கவும், வாக்காளர் பட்டியலில் திருத்தம் செய்யவும் வசதியாக, இந்திய தேர்தல் ஆணையத்தால் நவ 4, 5 மற்றும் 18,19 ஆகிய சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் வாக்குச்சாவடிகளில் சிறப்பு முகாம்கள் அறிவிக்கப்பட்டன. அதன்படி, நவ 4, 5 ஆகிய தேதிகளில் சிறப்பு முகாம்கள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.*

*இதற்கிடையில், தமிழக அரசால் நவ.18–ம் தேதி பணி நாளாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதையடுத்து, சிறப்பு முகாம் தேதிகளை நவ.18, 19–க்கு பதில், நவம்பர் 25, 26 ஆகிய சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளுக்கு மாற்றியமைத்து இந்திய தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது என்று தமிழக தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரத சாஹு தெரிவித்துள்ளார்.*

*தீபாவளியை முன்னிட்டு, அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் வசதிக்காக நவ.13-ம் தேதி தமிழக அரசு விடுமுறை அறிவித்ததுடன், அதற்கு மாற்றாகநவ. 18–ம்தேதியை பணி நாளாக அறிவித்தது குறிப்பிடத்தக்கது.*



▶ உலகத் தமிழர் பேரமைப்பு தலைவர் பழ.நெடுமாறன் உடல்நலன் குறித்து மதுரை இல்லத்தில் தமிழர் தேசிய முன்னணி பொதுச்செயலாளர் ஆவல் கணேசன் தனது குடும்பத்துடன் சென்று நலம் விசாரித்தார்.

## பயிர் காப்பீடு செய்யும் தேதியை நீட்டிக்க வேண்டும் தமாகா விவசாயஅணி கோரிக்கை

**புதுக்கோட்டை , நவ. 15–**

*தமிழகத்தில் சம்பா சாகுபடிக்கு பயிர் காப்பீடு செய்ய அரசு நவம்பர் 15ம் தேதியான இன்றுடன் முடிவடையவுள்ள நிலையில் காலநீட்டிப்பு செய்ய தமாகா விவசாயஅணி கோரிக்கை விடுத்துள்ளது.*

*இதுகுறித்து அக்கட்சியின் மாநில தலைவர் துவார் சி.ரெங்கராஜன் வெளியிட்டிருக்கும் செய்திகுறிப்பு:*

*வடகிழக்கு மழை தற்போதுதான்*



*பெய்துவரும் சூழ்நிலையில் அரியலூர் மாவட்டம் போன்ற மாவட்டங்களில் தற்போதுதான் நடவு பணியே ஆரம்பித்துள்ளது. பிற மாவட்டங்களில் விதை தெளிப்பதற்கும் மழை பெய்து வருவதால் விதைப்பு பணியும் பாதித்துள்ளது. தீபாவளி முடிந்த சூழ்நிலையில் விவசாயிகளிடம் காப்பீடு செய்ய பணத்திற்கு காஷ்டபட்டு வருகின்றனர். சில மாவட்டங்களில் பயிர் காப்பீடு செய்திட சர்வர் பிரச்சனையும் உள்ளது எனவே விவசாயிகளின் நலனை அரசு கருத்தில் கொண்டு பயிர் காப்பீடு செய்ய இந்தமாதம் 30 தேதிவரை காலநீட்டிப்பு வழங்கிட வேண்டும் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

# வில்லிவாக்கம் ஊராட்சி ஒன்றியம், மோரை ஊராட்சியில் ஆயுதபூஜை மற்றும் தீபாவளி கொண்டாட்டம்



திருவள்ளூர் , நவ.15–

திருவள்ளூர் மாவட்டம், வில்லிவாக்கம் ஊராட்சி ஒன்றியம், மோரை ஊராட்சியில் ஆயுதபூஜை விழா மற்றும் தீபாவளி திருநாள் மோரை ஊராட்சி மன்ற அலுவலகத்தில் சிறப்பாக கொண்டாடப்பட்டது.

மோரை ஊராட்சி மன்ற தலைவர் ஆர்.திவாகரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில், மோரை ஊராட்சி மன்றத்தில் பணிபுரியும் அனைத்து அலுவலர்கள் மற்றும் அனைத்து வார்டு உறுப்பினர்களும் கலந்து கொண்டு விழாவினை சிறப்பித்தனர். அனைவருக்கும் மோரை ஊராட்சி மன்ற தலைவர் ஆர்.திவாகரன் ஆயுத பூஜையை முன்னிட்டு பரிசு பொருட்களையும் தீபாவளியை முன்னிட்டு பட்டாசு மற்றும் இனிப்புகள் வழங்கி சிறப்பித்தார்.

இந்த நிகழ்வில், மோரை ஊராட்சிக்குட்பட்ட பகுதியில் வசித்து வரும், அரிய வகை முகச்சிதைவு நோயினால் பாதிக்கப்பட்டு தமிழக முதலமைச்சர் உதவியுடன் சிகிச்சை பெற்று வரும் சிறுமி டேனியா கலந்து கொண்டார். அவருக்கு ஊராட்சி மன்றத் தலைவர் ஆர்.திவாகரன் தீபாவளி பரிசுகளை வழங்கினார்.

இந்த விழாவில், ஊராட்சி மன்ற துணைத் தலைவர் வி.கார்த்திக், ஊராட்சி மன்ற செயலர் ஜெ.நாகராஜன் மற்றும் கிராம பொதுமக்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



காரைக்கால் மாவட்டத்தில் ஒவ்வொரு ஆண்டும் உலக மாற்றுத் திறனாளிகள் தினத்தை முன்னிட்டு புதுச்சேரி அரசு மூலம் பல்வேறு துறைகளில் சிறந்து விளங்குகின்ற மாற்றுத்திறனாளிகளை கௌரவப்படுத்தும் விதமாகவும் ஊக்கப்படுத்தும் விதமாகவும் காரைக்கால் மாவட்டத்தைச் சேர்ந்த இரண்டு மாற்றுத்திறனாளிகளை காரைக்கால் மாவட்ட ஆட்சியர் குலோத்துங்கன் தலைமையில் முதல் நிலை தேர்வு செய்யப்பட்டு இரண்டாம் நிலை தேர்வுக்காக புதுச்சேரிக்கு அனுப்பப்படுகிறார்கள். இத்தேர்வில் மாவட்ட ஆட்சியர் அரசு பொது மருத்துவமனை இ.என்.டி மருத்துவர் விஜயசங்கர் அவர்களும் சமூக நலத்துறையின் உதவி இயக்குனர் ராஜேந்திரன் அவர்களும் திட்டம் மற்றும் ஆராய்ச்சி துறையின் இணை இயக்குனர் பாலசுப்பிரமணியன் நலஅதிகாரி சுந்தரம் , கலந்து கொண்டனர். இவர்கள் இருவருக்கும் உலக மாற்றுத் திறனாளிகள் தினத்தன்று தலா பத்தாயிரம் ரொக்கப் பரிசும் மற்றும் சான்றிதழும் வழங்கி கௌரவிக்க உள்ளார்கள்.

# திருவலம் வில்வநாதீஸ்வரர் கோயிலில் சிவானந்த மௌன குருசாமிகள் ஞானம் பெற்று பிரவேசித்த 63 ஆவது ஆண்டு விழா



வேலூர் நவ.15.

வேலூர் மாவட்டம் காட்பாடி அடுத்துள்ள திருவலத்தில் புகழ்பெற்ற வில்வநாதீஸ்வரர் கோயில் அமைந்துள்ளது. காசிக்கு இணையாக தென்கயிலாயம் என்று போற்றப்படும் இந்த திருத்தலத்தில் விநாயகப் பெருமான் அம்மையப்பனை சுற்றி வந்து கனி வாங்கிய இடம் என தல வரலாறு கூறுகிறது.

புகழ் பெற்ற திருத்தலத்தில் ஸ்ரீலஸ்ரீ சிவானந்த மௌன குருசாமிகள் ஞானம் பெற்று பிரவேசித்த 63 ஆவது ஆண்டு விழா கொண்டாடப்பட்டது. இதையொட்டி திருவலம் அருள்மிகு தனுமத்யம்பாள் உடனுறை வில்வநாதீஸ்வரர் கோயிலில் ஸ்ரீலஸ்ரீ சித்தர் சிவானந்த மௌனகுரு சுவாமிகள் அறக்கட்டளை சார்பில் பல்வேறு சிறப்பு வழிபாடு நிகழ்ச்சிகள் நடைபெற்றன. காலையில் ஆலய உட்பிரகாரத்தில் அமைந்துள்ள ஸ்ரீலஸ்ரீ சித்தர் சிவானந்த மௌனகுரு சாமிகளுக்கு திருமஞ்சன தீர்த்த அபிஷேகம் நடைபெற்றது. அதை தொடர்ந்து வில்வபத்ர புஷ்ப அர்ச்சனையும் தொடர்ந்து மகாதீராதனையும் நடைபெற்றது.

நண்பகலில் அன்னதானம் நடைபெற்றதோடு இரவு சுமார் 7 மணி அளவில் புஷ்ப பல்லக்கு திருவீதி விழா நடைபெற்றது. வண்ண வண்ண மலர்களை கொண்டு அலங்கரிக்கப்பட்ட பல்லக்கில் ஸ்ரீலஸ்ரீ சித்தர் சிவானந்த மௌனகுரு சுவாமிகளின் வெண்கல திரு உருவ சிலை வைக்கப்பட்டு வீதியுலாநடைபெற்றது.கோயிலில் தொடங்கிய இந்நிகழ்ச்சி திருவலத்தின் முக்கிய வீதிகள் வழியாக வலம் வந்து மீண்டும் கோயிலை வந்தடைந்தது.

முன்னதாக கோயிலின் வாயிலில் அமைந்துள்ள ஸ்ரீலஸ்ரீ சித்தர் சிவானந்த மௌனகுரு சுவாமிகள் சன்னதியில் மகாதீபாராதனை காட்டப்பட்டு வழிபாடு நடத்தப்பட்டது. இதில் அறக்கட்டளை தலைவர் நந்தகுமார் , நிர்வாகிகள், சண்முகம்,பாண்டு,சேனாதிபதி, கிருபாகரன், ஏகன், Km. பாலு மற்றும் ஊர் பொதுமக்கள் உட்பட ஏராளமான பக்தர்கள் கலந்துகொண்டு வழிபட்டனர்.

## திருவள்ளூர் நகராட்சியில் நீட் விலக்கை வலியுறுத்தி

# அஞ்சல் அட்டையில் கையெழுத்து பெரும் இயக்கத்தை முன்னாள் நகரமன்ற தலைவர் தொடங்கி வைத்தார்



திருவள்ளூர், நவ.15–

நீர் விலக்கு நம் இலக்கு என்ற கையெழுத்து இயக்கத்தை திமுக இளைஞரணி செயலாளரும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சமீபத்தில் தொடங்கி வைத்தார்

தமிழக முழுவதும் நீட் இலக்கு நம் இலக்கு என்ற திட்டத்தின் கீழ் நீட் வேண்டாம் என்பதை வலியுறுத்தும் விதமாக திமுக சார்பில் கையெழுத்து பெறப்பட்டு வருகிறது

இதனைத் தொடர்ந்து திருவள்ளூர் நகராட்சி 10ஆவது வார்டு உறுப்பினர் பாபுகமலநாதன் ஏற்பாட்டில் நீட் விலக்கு நம் இலக்கு என்ற திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டிற்கு நீட் வேண்டாம் என்பதை வலியுறுத்தும் விதமாக அஞ்சல் அட்டையில் கையெழுத்து இடும் இயக்கத்தை முன்னாள் நகர மன்ற தலைவர் பொன். பாண்டியன் தொடங்கி வைத்தார்

திருவள்ளூர் ஸ்ரீ வீரராகவ பெருமாள் கோவில் வளாகத்தில் நடைபெற்ற நீட் விளக்கு கையெழுத்து பெரும் நிகழ்ச்சியில் வியாபாரிகள் பக்தர்கள் பொதுமக்கள் மாணவர்கள் சமூக ஆர்வலர்கள் என அனைவரும் ஆர்வமுடன் நீட் விளக்கை எதிர்க்கும் அஞ்சல் அட்டையில் கையெழுத்திட்டனர்



சென்னை எண்ணூர் நெட்டுக் குப்பத்தைச் சேர்ந்த தேசப்பன் மற்றும் திருவொற்றியூர் குப்பததை சேர்ந்த மீனவர் ராஜேந்திரன் ஆகியோரின் வீடுகளில் பட்டாசு தீப்பொறி பட்டதில் தீப்பிடித்து எரிந்து வீடுகளில் இருந்த பொருட்கள் முற்றிலும் சேதம் அடைந்தது வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் அயலக அணி தலைவர் டாக்டர்.கலாநிதி வீராசாமி திருவொற்றியூர் மாநகராட்சி மண்டல குழு தலைவர் கிழக்கு பகுதி செயலாளர் தி.மு. தனியரசு மேற்கு பகுதி செயலாளர் வை.மா.அருள் தாசன்,1வது வார்டு மாமன்ற உறுப்பினர் மு.சிவக்குமார் ஆகியோர் நேரில் சென்று பார்வையிட்டு பாதிக்கப்பட்ட தேசப்பன் மற்றும் ராஜேந்திரன் ஆகியோரின் குடும்பத்தினர்க்கு ஆறுதல் கூறி தி.மு.தனியரசு மற்றும் மு.சிவக்குமார் ஆகியோரின் ஏற்பாட்டில் வடச்சென்னை எம் பி டாக்டர் கலாநிதி வீராசாமி நிதியுதவியும் 10ஆயிரம் ரூபாயும் மற்றும் 25கிலோ அரிசி, பாய் தலகானி,போர்வை, சமையல் பொருட்கள், தண்ணீர் குடம் போன்றவற்றை வழங்கினார் மற்றும் வருவாய்த்துறை மற்றும் மீன் வளத்துறை அதிகாரிகளை தொலைபேசியில் அழைத்து பருவமழை காலத்தில் அவர்களுக்கு வழங்கப்பட உள்ள நிதியினை விரைந்து வழங்குமாறு தெரிவித்தனர்

# சென்னை காசிமேடு மீன் பிடி துறைமுகத்தில் கடல் அலை சீற்றத்தின் காரணமாக மீனவர்கள் கடலுக்கு செல்ல வில்லை



காசிமேடு, நவ.15–

தென்கிழக்கு வங்கக் கடலில் உருவான குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி எதிரொலியாக சென்னை காசிமேடு மீன்பிடித் துறைமுகத்தில் கடல் சீற்றத்துடன் காணப்படுகிறது

கடல் சீற்றத்தால் காசிமேடு மீனவர்கள் கடலுக்கு மீன்பிடிக்க செல்லாமல் காசிமேடு மீன் பிடி துறைமுகம் வார்ப்பு பகுதியில் 1000க்கும் மேற்பட்ட விசைப்படகுகள் மற்றும் 1500 பைபர் படகுகள் கடற்கரைப் பகுதியில் நங்கூரமிட்டு நிறுத்தி வைத்துள்ளனர்.

மழையும் பொருட்படுத்தாமல் காசிமேடு மீனவர்கள், ஆந்திரா மீனவர்கள் கொட்டும் மழையிலும் மீன்வலைகளை பின்னி வருகின்றனர். மேலும் கொட்டும் மழையிலும் இளைஞர்கள் காசிமேடு மீன்பிடி துறைமுகத்தில் தூண்டில் போட்டு மீன்களைப் பிடித்து வருகின்றனர்

# காசிமேடு கடலில் குளிக்க சென்ற இரு சிறுவர்கள் மாயம் மழை மற்றும் கடல் அலை சீற்றத்தால் மீட்கும் பணியில் தொய்வு



தருண், சாமுவேல்

சென்னை, நவ.15–

சென்னை காசிமேடு நாகூரார் தோட்டம் பகுதியைச் சேர்ந்த 13வதுடைய சாமுவேல், அதே பகுதியை சேர்ந்த 12 வயதுடைய தருண் இருவரும் காசிமேடு மீன்பிடி துறைமுகம் கடற்கரையில் கடலில் இறங்கி குளித்து கொண்டு இருந்தனர்.

தீடீரென ஏற்பட்ட அலையின் சீற்றத்தால் கடலில் குளித்து கொண்டு இருந்த இரண்டு சிறுவர்களும் கடல் அலையில் சிக்கி அடித்து செல்வதை பார்த்த பொதுமக்கள் கூச்சல் இட்டு கத்தினர்.

கடற்கரைக்கு பொழுதை கழிக்க வந்த பாண்டிச்சேரி தலைமை நீதிபதி பாதுகாப்பு அதிகாரி புஷ்பராஜ் என்பவர் அலறல் சத்தம் கேட்டு பார்த்தபொழுது கடலில் சிக்கி உயிருக்கு போராடிக் கொண்டிருந்த சிறுவர்களை மீட்க உடனடியாக கடலில் குதித்து காப்பாற்ற முயன்ற போதும் அவரால் அவர்களை காப்பாற்ற முடியாமல் போனது, பின்னர் அவர் தன் உயிரை பாதுகாத்துக் கொள்ள கடலிலிருந்து நீச்சல் அடித்து கரைக்கு வந்தார்.

இச்சம்பவம் குறித்து காசிமேடு மீன்பிடித் துறைமுகம் போலீசார்க்கு பொதுமக்கள் தகவல் தெரிவித்தனர் தகவல் அறிந்து சம்பவ இடத்துக்கு விரைந்து வந்த போலீசார் தீயணைப்பு கட்டுப்பாட்டு துறைக்கு தகவல் தெரிவித்தனர் தகவலின்பேரில் ராயபுரம் தீயணைப்பு வீரர்கள் விரைந்து வந்து,மாயமான சிறுவர்களை மீட்கும் பணியில் ஈடுபட்டனர். பின்னர் இருள் சூழ்ந்ததால் சிறுவர்களை மீட்கும் பணியில் தொய்வு ஏற்பட்டது.

இந்நிலையில் கடலில் மாயமான இரு சிறுவர்களை மீட்கும் பணியில் நேற்று மெரினா கடற்கரை தீயணைப்பு நிலையம் நீச்சல் வீரர்கள் ரப்பர் படகுகள் மூலம் 5 கிலோ மீட்டர் தூரத்திற்கு சென்று சுமார் 2மணி நேரம் தேடி வந்தனர் கடல் அலையின் சீற்றத்தால் மழையின் காரணமாக மீட்பு பணியில் நேற்றும் தொய்வு ஏற்பட்டுள்ளது. இதனால் சிறுவர்களின் பெற்றோர்கள் கண்ணீர் விட்டு கதறி அழுதபடி உள்ளனர்

## காஞ்சிபுரத்தில் தன் உயிர் காக்க தலைக்கவசம் அணிந்து வந்த வாகன ஓட்டிகளுக்கு

# மெடல் அணிவித்து மரக்கன்றுகளை வழங்கிய மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர்



காஞ்சிபுரம் நவ.15–

தமிழக சாலைகளில் ஏற்படும் வாகன விபத்துகளில் பெரும்பாலானது இருசக்கர வாகன விபத்துகள் தான் அதிகமாக உள்ளது. அதிலும் குறிப்பாக தலைக்கவசம் அணியாத வாகன ஓட்டிகள் தான் மிக அதிக அளவில் உயிரிழக்கின்றனர்.

அந்த வகையில் இருசக்கர வாகன ஓட்டிகளுக்கு தலைக்கவசம் அணிவதன் அவசியத்தை வலியுறுத்தி காஞ்சிபுரம் மாவட்ட ஊர்க்காவல் படை பிரிவு சார்பில் இருசக்கர வாகன பேரணி நடைபெற்றது.

ஊர்க்காவல் படை பிரிவை சேர்ந்த நூற்றுக்கும்மேற்பட்டோர் இருசக்கர வாகனத்தில் தலைக்கவசம் அணிந்து காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்திலிருந்து புறப்பட்டு காஞ்சிபுரம் நகரின் முக்கிய வீதிகள் வழியாக இரு சக்கர வாகன ஓட்டிகளுக்கு தலைக்கவசம் அணிவதின் அவசியத்தை வலியுறுத்தியவாறு பேரணியாக சென்றனர்.

பேரணியாகச் சென்ற ஊர்காவல் படையினருடன் குழந்தைகள் தினவிழாவை முன்னிட்டு பி.ஏ.வி. பன்னாட்டு மேனிலை பள்ளி மாணவ, மாணவிகள் கலந்து கொண்டு காஞ்சிபுரம் பேருந்து நிலையம் அருகே காமராஜர் சாலையில் தலைக்கவசம் குறித்து விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய பதாகைகளை கையில் ஏந்தி விழிப்புணர்வு ஏற்படுத்தினார்கள்.

மேலும் தங்கள் உயிரை காத்துக் கொள்ளும் வகையில் தலைக்கவசம் அணிந்து கொண்டு இருசக்கர வாகனத்தில் சாலையில் வந்த வாகன ஓட்டிகளுக்கு காஞ்சிபுரம் மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் டாக்டர் மா.சுதாகர் மற்றும் பள்ளி மாணவ மாணவிகள் மெடல் அணிவித்து மரக்கன்றுகளை வழங்கி கௌரவித்தார்கள்.

பேரணியில் சைபர் கிரைம் ஏ டி எஸ் பி பாலமுருகன், ஊர்காவல் படை ஏரியா கமாண்டர் முனைவர் ஜே.ஸ்டெல்லா மேரி, உதவி கமாண்டர் சரவணன், விஷ்ணு காஞ்சி காவல் ஆய்வாளர் வெற்றிச்செல்வம், காஞ்சிபுரம் அலகு வி. பிரகாஷ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# பெருந்தலைவர் எம்.ஆர்.கே. 34 வது நினைவு தினம் திமுக சார்பில் அனுசரிப்பு



காட்டுமன்னார் கோயில் நவ.15

கடலூர் மாவட்டம் காட்டு மன்னார்கோவில் அருகில் உள்ள முட்டம் கிராமத்தில் பிறந்தவர் எம் ஆர் கிருஷ்ண மூர்த்தி இவர் திராவிட முன்னேற்றக் கழகத்தின் மிகப்பெரிய ஆளுமையாக விளங்கியவர் காட்டுமன்னார்கோயில் பகுதியில் உள்ள பிற்படுத்தப்பட்ட தாழ்த்தப்பட்ட வகுப்பினர் முன்னேற்றத்திற்கு பாடுபட்டவர் இவர் 1989ஆம் ஆண்டு மாரடைப்பால் காலமானார் அதன் பின்னர் அவரது புதல்வரும் தற்போதைய வேளாண் துறை அமைச்சர் எம்.ஆர். கே. பன்னீர்செல்வம் தந்தை வழியில் இப்பகுதி மக்களின் முன்னேற்றத்திற்கு பாடுபட்டு வருகிறார்.

மறைந்த பெருந்தலைவர் எம்.ஆர் கிருஷ்ண மூர்த்தி அவர்களின் 34 வது நினைவு தினம் இன்று காட்டுமன்னார்கோயில் தனியார் திருமணமண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் தமிழக வேளாண்துறை அமைச்சர் எம் ஆர் கே பன்னீர்செல்வம் சட்டமன்ற உறுப்பினர் கோவை செழியன், நெல்லிக்குப்பம் புகழேந்தி, மருதூர் ராமலிங்கம், திமுக ஒன்றிய செயலாளர் முத்து சாமி, பேரூராட்சி மன்றத் தலைவர் கணேசமூர்த்தி, எம் ஆர் தேவசிகாமணி, ஒன்றிய செயலாளர் ராமலிங்கம், தங்க ஆனந்தன், அவைத்தலைவர் கருணாநிதி, ஜெயபாண்டியன், கல்யாணசுந்தரம், ஒன்றிய குழு தலைவர் சஃதியா, பர்வீன் நிஜார் அகமது, பால மணிகண்டன், பாஸ்கர், சுப்பிரமணியன், மணிமாறன், செந்தில்குமார், பூக்கடை செந்தில், செல்வகுமார், சமத்துவம் விடுதலை சிறுத்தைகள் கட்சியின் மாவட்ட செயலாளர்கள் மணவாளன் தமிழ் ஒளி உள்ளிட்டோர் கலந்து கொண்டு நினைவேந்தல் உரையாற்றினார்.

## ஸ்ரீ ராம் பொறியியல் கல்லூரியில்

# பொறியியல் மாணவர்களுக்கான வேலை வழிகாட்டுதல் மற்றும் தொழிற்பயிற்சி திட்ட முகாம்



திருவள்ளூர், நவ. 15 –

திருவள்ளூர், பெருமாள்பட்டு ஸ்ரீ ராம் பொறியியல் கல்லூரியில், இரண்டாம், மூன்றாம் மற்றும் இறுதி ஆண்டு மாணவர்களுக்கு வேலை வழிகாட்டுதல் மற்றும் தொழிற்பயிற்சி திட்ட முகாம் நடைபெற்றது. இந்த முகாமினை லிங்க்ட்இன் (LinkedIn) மற்றும் ஃபேஸ்ப்ரப் (Faceprep) வழிகாட்டுதலின்படி நான் முதல்வன் குழுவினர் நடத்தினர்.

ஸ்ரீராம் பொறியியல் கல்லூரியின் முதல்வர் சி.பி.கார்த்திகேயன் தலைமை வகித்தார். சிறப்பு பயிற்சியாளர் தாசரி மணிராம் மாணவர்களுக்கு வேலை வழிகாட்டுதல் திட்டங்களை விளக்கினார். முகாம் ஏற்பாடுகளை ஸ்ரீ ராம் பொறியியல் கல்லூரியின் “வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சிதுறை” சார்பில் ஒருங்கிணைப்பாளர்கள் பி.தீபக் மற்றும் ஏ.ராஜிவ் செய்திருந்தனர்.

இந்த நிகழ்ச்சியில் கல்லூரி முதல்வர் பேசியதாவது, இன்றைய மாணவர்கள் பொறியியலில் தற்போது வெளிவரக்கூடிய தொழில் நுட்பங்களை பற்றி ஆர்வம் காட்ட வேண்டுகோள் விடுத்தார். மேலும் மாணவர்கள் தாங்கள் படித்த துறையில் தொழில் முனைவோராக உருவாக வேண்டும் என கூறினார்.

சிறப்பு பயிற்சியாளர் பேசியதாவது, இன்றைய மாணவர்கள் பொறியியலில் தனது திறனை வளர்த்துக் கொள்ள லிங்க்ட்இன் வேலை வாய்ப்பு செயலி உதவும் என்றார். இச்செயலியில் ஏராளமான இலவச கோர்ஸ் உள்ளது என்றும், மாணவர்கள் அதனை பயன்படுத்தி தங்கள் திறனை வளர்த்துக் கொள்ளலாம் என கூறினார். மேலும் செயற்கை நுண்ணறிவு துறையில் ஏராளமான வேலைவாய்ப்புகள் உருவாக போகிறது எனவும் பேசினார். நிகழ்ச்சியின் இறுதியாக பேராசிரியர் ராஜிவ் நன்றி உரை நல்கினார்.

## சென்னை திருவொற்றியூர் மீன் மார்க்கெட்டில்

# கடந்த 4 மாதங்களாக ரூ. 1.50 லட்சம் மதிப்புள்ள மீன்களை திருடிய வாலிபர் கைது



சென்னை, நவ, 15–

திருவொற்றியூர் காலடிப்பேட்டையில் மீன் மார்க்கெட் உள்ளது. இங்கு 50க்கும் மேற்பட்ட மீன் கடைகள் வைத்து பெண்கள் காசிமேட்டில் இருந்து மீன்களை மொத்தமாக வாங்கி வந்து சில்லறையாக விற்பனை செய்து வருகிறார்கள்.

இந்த மார்க்கெட்டில் மீன்கள் விற்பனைக்கு பிறகு மீதமுள்ள மீன்கள் இரவு நேரத்தில் அங்குள்ள ஐஸ் பெட்டிகளில் பதப்படுத்தி வைத்து விட்டு வீட்டிற்கு செல்வது வழக்கம். இந்நிலையில் பெட்டிகளில் வைத்திருந்த மீன்கள் கடந்த 4 மாதங்களாக தொடர்ந்து காணாமல் போய் உள்ளது.

நேற்று அதிகாலை வழக்கம்போல் காசிமேட்டில் வாங்கியமீன்களைமார்க்கெட்டில் உள்ள பெட்டிகளில் மீன்களை வைப்பதற்காக மீனவ பெண்கள் வந்துள்ளனர். அப்போது மர்ம நபர் ஒருவர் பெட்டிகளில் உள்ள மீன்களை திருடிக் கொண்டிருப்பதை பார்த்து அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

இதைத்தொடர்ந்து பெண்கள் அந்த மர்ம நபரை மடக்கி பிடித்தனர். இதனையடுத்துதிருவொற்றியூர் காவல் நிலையத்தில் புகார் அளித்தனர். தகவலின் பேரில் சம்பவம் இடத்திற்கு வந்த போலீசார்கள் மர்ம நபரை பிடித்து விசாரித்தனர்.

விசாரணையில் காசிமேடு சி.ஜி. காலனியைச் சேர்ந்த கார்த்திக் (25) என்பது தெரிந்தது. இவர் இந்த மீன் மார்க்கெட்டில் கடந்த 4 மாதங்களாக ரூ. 1.50 லட்சம் மதிப்புள்ள மீன்களை திருடி சென்றது தெரியவந்தது.

இது குறித்து போலீசார் கார்த்திக் மீது வழக்கு பதிவு செய்து கைது செய்து கோர்ட்டில் ஆஜர் படுத்தி சிறையில் அடைத்தனர்.

# பல்லடம் புதிய போலீஸ் டிஎஸ்பி – விஜயகுமார்



திருப்பூர் , நவ, 15–

திருப்பூர் மாவட்டம் பல்லடம் பகுதியில் பல்வேறு விபத்துக்கள் மற்றும் கொலை, கொள்ளை, வழிப்பறி, மோசடி உள்ளிட்ட குற்ற சம்பங்கள் அதிகரித்து மக்களை அச்சுறுத்துவதாகவும், இதனால் காவல்துறை நிர்வாகம் மக்களின் அச்சத்தை போக்கும் வகையில் குற்றச்சம்பவங்கள் அதிகரிக்காமல் இருக்க அதிரடி மாற்றங்களை மேற்கொண்டுள்ளது.

இதனை தொடர்ந்து பல்லடம் டி.எஸ்.பி., சவுமியா, கடலூருக்கு மாற்றப்பட்டார். இவருக்கு பதிலாக கடலூர் மதுவிலக்கு டி.எஸ். பி.,யாக பணியாற்றி வந்த விஜயகுமார் பல்லடம் டி.எஸ்.பி.,யாக மாற்றப்பட்டு பொறுப்பேற்றுள்ளார்.பல்லடம் இன்ஸ்பெக்டர் மணிகண்டன், மதுரை மாவட்டத்திற்கு மாற்றம் செய்யப்பட்டு காத்திருப்போர் பட்டியலில் வைக்கப்பட்டுள்ளார். இவருக்கு பதிலாக புதிய இன்ஸ்பெக்டர் நியமிக்கப்படாததால் பல்லடம் குற்றப்பிரிவு இன்ஸ்பெக்டர் சரஸ்வதி கூடுதல் பொறுப்புடன் சட்டம் ஒழுங்கு பிரிவையும் கவனித்து வருகிறார்...

### கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு

# கல்லூரி, பள்ளி மாணவ மாணவிகளுக்கான போட்டிகள்: எம்எல்ஏ ராஜா பங்கேற்பு



சங்கரன்கோவில், நவ.15

தென்காசி வடக்கு மாவட்ட திமுக மாணவரணி சார்பில் சங்கரன்கோவிலில் கல்லூரி மாணவ மாணவிகள் மற்றும் அரசுப்பள்ளி, உதவி பெறும் பள்ளி . தனியார் பள்ளிகளில் பயிலும் 9 ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை மாணவ மாணவிகளுக்கு முன்னாள் முதல்வர் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு மாவட்ட அளவிலான பேச்சுப்போட்டிகள் மற்றும் கட்டுரை போட்டிகள் நடைபெற்றது.

மாணவரணி மாவட்ட அமைப்பாளர் உதயகுமார் தலைமை வகித்தார், மாவட்டத் துணை அமைப்பாளர்கள் வீர மணிகண்டன் , விக்ரம் மணிகண்டன் ஆகியோர் முன்னிலை வகித்தனர், மாவட்ட துணை அமைப்பாளர் முத்துலட்சுமி நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார். மாவட்டத்துணை அமைப்பாளர் சதீஷ் வரவேற்றார். சங்கரன்கோவில் மற்றும் வாசுதேவநல்லூர் சட்டமன்ற தொகுதியைச் சார்ந்த அனைத்து வகை உயர்நிலை, மேல்நிலை மற்றும் மெட்ரிக் பள்ளி மாணவ மாணவிகள் மற்றும் கல்லூரி மாணவ, மாணவிகள் என 200க்கும் மேற்பட்டோர் போட்டிகளில் கலந்து கொண்டு தங்களது மொழித்திறனின் ,ஆற்றலை. வெளிப்படுத்தினர், தொடர்ந்து பேச்சுப் போட்டி கட்டுரை போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கு பரிசளிப்பு விழா நிகழ்ச்சி நடைபெற்றது.

இதில் தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளர் ராஜா எம்எல்ஏ கலந்து கொண்டு, வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுத்தொகை,சான்றிதழ்மற்றும் பதக்கம் வழங்கி பேசினார். இதில் தலைமை செயற்குழு உறுப்பினர்கள் முன்னாள் அமைச்சர் தங்கவேலு, யூ எஸ் டி சீனிவாசன், மாவட்ட பொருளாளர் சரவணன், மாவட்ட துணை செயலாளர் புனிதா , நகரச் செயலாளர் பிரகாஷ் ஆகியோர் கலந்து கொண்டு பேசினர்.

போட்டிகளில்வெற்றிபெற்ற மாணவ மாணவிகளுக்கு. முதல் பரிசு ரூ.3000, இரண்டாம் பரிசு ரூ 2000, மூன்றாம் பரிசாக ரூ.1000 என பரிசுத்தொகை வழங்கப்பட்டது.

மேலும், பங்கேற்ற மாணவ , மாணவிகள் அனைவருக்கும் பாராட்டு சான்றிதழும் வழங்கப்பட்டன. போட்டிகளை ஆசிரியர் பயிற்றுநர் ஆனந்தராஜ் பாக்கியம், தலைமை ஆசிரியர் அலெக்ஸ் மற்றும் ஆசிரியர் தங்கராஜ் ஆகியோர் நடத்தினர்.

இதில் மேலநீலிதநல்லூர் கிழக்கு ஒன்றிய கழகச் செயலாளர் பெரியதுரை, புளியங்குடி மனோ கல்லூரி முதல்வர் கண்ணன், சிவகிரி ஸ்டெல்லா மேரிஸ் கல்லூரி முதல்வர் நல்ல சிவன், உமாபாலன், இளைஞரணி மாவட்டதுணைஅமைப்பாளர்கள் கார்த்திக், ராஜ், ராஜராஜன், அன்சாரி, தொண்டரணி மாவட்ட அமைப்பாளர் அப்பாஸ் அலி,தொண்டரணி மாவட்ட துணை அமைப்பாளர் ராஜவேல் ரத்தினம், விளையாட்டு மேம்பாட்டு அணி மாவட்ட துணை அமைப்பாளர் கேபிள் கணேசன், தகவல் தொழில் நுட்ப அணி மாவட்ட துணை அமைப்பாளர் சிவாஜி, நகர துணை செயலாளர் முத்துக்குமார் , ஜலால், ஜான்சன் , உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



மதுரை மாநகர மாவட்ட காங்கிரஸ் கமிட்டி சார்பாக முன்னாள் பாரத பிரதமர் ஜவஹர்லால் நேருவின் 134வது பிறந்த தினத்தை முன்னிட்டு காலை 10.30 மணியளவில் தமுக்கத்தின் அருகில் உள்ள நேரு திருவுருவச் சிலைக்கு மதுரை மாநகர் மாவட்ட காங்கிரஸ் கமிட்டித் தலைவர் வீ.கார்த்திகேயன் மற்றும் காங்கிரஸ் கட்சியின் மாநில பொதுச் செயளாலர் உச்ச நீதிமன்ற வழக்கறிஞர் பிரசாந் தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டு பொது மக்களுக்கும் மாணவ மாணவிகளுக்கும் இனிப்பு வழங்கி கொண்டாடப்பட்டது, இந்நிகழ்வில் காங்கிரஸ் மாநில பொதுக்குழு உறுப்பினர், மாமன்ற உறுப்பினர் முருகன், மாநில நிர்வாகிகள், மாவட்ட காங்கிரஸ் நிர்வாகிகள், தலைவர்கள், வார்டு தலைவர்கள் மற்றும் துணை அமைப்பு தலைவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# மேலகரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத்தில் கடன் மேளா



தென்காசி,நவ.15–

தென்காசி மாவட்டம், மேலகரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் கூட்டுறவு சார்பதிவாளர்/ செயலாட்சியர் மு.மாரியப்பன் தலைமையில் கடன் மேளா நடைபெற்றது.

இந்த மேளாவில் சிறப்பு விருந்தினராக மண்டல இணைப்பதிவாளர் நரசிம்மன் கலந்துகொண்டார்,பொதுமக்கள் மற்றும் விவசாயிகள் இதில் கலந்துகொண்டு மண்டல இணைப்பதிவாளரிடம் கடன் விண்ணப்பங்களை அளித்தனர், கூட்டுறவுத்துறை மூலம் வழங்கப்பட்டு வரும் அனைத்து கடன்கள் குறித்து இணைப் பதிவாளர் விரிவாக எடுத்துரைத்தார்.

இவ்விழாவில் சங்க வளாகத்தில் வைத்து இணைப்பதிவாளர் முன்னிலையில் மூத்த உறுப்பினரைக் கொண்டு மரம் நடும் நிகழ்ச்சி நடைபெற்றது, இந்நிகழ்ச்சியில் விவசாயிகள், பொதுமக்கள், மத்திய கூட்டுறவு வங்கி கள மேலாளர் ரவிச்சந்திரன், சங்கச் செயலாளர் மாணிக்கம், மற்றும் பணியாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



தென்காசியில் திராவிட தமிழர் கட்சி சார்பில் நீட் தேர்வுக்கு எதிரான கையெழுத்து இயக்கத்தினை தென்காசி தெற்கு மாவட்ட திமுக பொறுப்பாளர் ஜெயபாலன், நாடாளுமன்ற உறுப்பினர் தனுஷ் எம்.குமார் ஆகியோர் தொடங்கி வைத்தனர். இந்நிகழ்ச்சியில் தென்காசி நகரச் செயலாளர் சாதிர், இளைஞர் அணி அமைப்பாளர் கிருஷ்ண ராஜா, துணை அமைப்பாளர் அப்துல் ரஹீம், திமுக ஒன்றியச் செயலாளர் அன்பழகன், திராவிடர் கட்சி வீரபாண்டியன், விடுதலை சிறுத்தைகள் கட்சி மாவட்டச் செயலாளர் செல்வம், உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# ஆவுடையார்கோயில் அரசுப் பள்ளியில் தமிழ்கூடல் விழா மற்றும் குழந்தைகள் தின விழா கொண்டாட்டம்



ஆவுடையார்கோயில், நவ.15–

குழந்தைகள் தின விழாவை முன்னிட்டு ஆவுடையார்கோவில் அரசு மேல்நிலைப் பள்ளியில் தமிழ் நாடு தமிழ் வளர்ச்சித்துறையின் சார்பில் பள்ளிகளில் நடைப்பெறும் தமிழ்கூடல் நிகழ்வும் குழந்தைகள் தின விழாவும் சிறப்புடன் கொண்டாடப்பட்டது.

இந்நிகழ்விற்கு பள்ளி தலைமையாசிரியர் தாமரைச்செல்வன் தலைமை தாங்கினார், சிறப்பு விருந்தினராக கவிஞர் ஜீவி கலந்து கொண்டு மாணவர்களுக்கு தமிழ் சார்ந்த ஆர்வத்தை ஏற்படுத்தும் வகையிலும் தன்னம்பிக்கை ஏற்படுத்தும் வகையிலும் சிறப்புரையாற்றினார், முதுகலை தமிழாசிரியர் குமார் அனைவரையும் வரவேற்றார்.வரலாற்று ஆசிரியர் மதியழகன் கவிஞர் ஜீவி பற்றிய அறிமுகம் செய்து வைத்தார், கடந்த ஆண்டு பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வில் சமூக அறிவியல் பாடத்தில் முதல் மூன்று இடங்கள் பெற்ற மாணவர்களுக்கு ஆசிரியர் செல்வஷாஜி பரிசு வழங்க அதனை கவிஞர் ஜீவி வழங்கித்தந்தார், அனைத்து மாணவர்களுக்கும் மதிய உணவு சிக்கன் பிரியாணி வழங்கப்பட்டது.

இதனை அனைத்து ஆசிரியர் பெருமக்களும் பள்ளி மேலாண்மைக் குழுவும் வழங்கி தந்தார்கள், மேலும் மாணவர்கள் கலைநிகழ்ச்சி சிறப்புடன் நடைபெற்றது, இந்நிகழ்வில் அனைத்து ஆசிரியர் பெருமக்களும், பள்ளி மேலாண்மைக் குழுத் தலைவி கவிதா உள்ளிட்ட உறுப்பினர்களும், மற்றும் அனைத்து மாணவ மாணவிகளும் கலந்து கொண்டு சிறப்பித்தனர், இறுதியில் உதவி தலைமை ஆசிரியர் ஸ்டாலின் நன்றி கூற விழா இனிதே நிறைவு பெற்றது.

# கீரனூர் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் குழந்தைகள் தினவிழா



கீரனூர் , நவ.15–

கீரனூர் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற குழந்தைகள் தின விழாவில் நடந்து முடிந்த காலாண்டு தேர்வில் சாதனை படைத்த மாணவர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

புதுக்கோட்டை மாவட்டம் கீரனூர் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற குழந்தைகள் தினவிழா நிகழ்வில் பள்ளியில் பணியாற்றி ஓய்வு பெற்ற ஆசிரியர் கணேசன் அவரது மகள் வழக்கறிஞர் நங்கை நடராஜன் ஆகியோர் கலந்து கொண்டு காலாண்டுத்தேர்வில் வகுப்பு வாரியாக முதல் மூன்று இடங்களை பெற்ற மாணவர்கள், நூறு சதவீதம் வருகை புரிந்த மாணவர்கள், நல்லொழுக்க மாணவர்கள் என மொத்தம் 140 மாணவர்களுக்கு பரிசுகளை வழங்கி ஊக்குவித்தனர். விழாவிற்கு பள்ளியின் தலைமை ஆசிரியர் பரிமளம் தலைமை தாங்கி உரையாற்றி நிகழ்வினை துவக்கி வைத்தார். அனைத்து ஆசிரியர்கள் மற்றும் அலுவலகப் பணியாளர்களும் கதராடை அணிவித்து கவுரவிக்கப்பட்டனர்.

மாணவர்கள் கல்வி கற்பதோடு ஒழுக்கத்திலும் சிறந்துவிளங்கி பள்ளிக்கும் ஊருக்கும் பெருமை தேடி தரவேண்டுமென கணேசன் வாழ்த்தினார். ஆசிரியர்களே மற்றுமொரு பெற்றோர். ஆசிரியர்களின் வழிகாட்டுதலினாலே இன்று வழக்கறிஞர் என்னும் பணிநிலைக்கு உயர்ந்துள்ளேன் என்றும் மாணவர்களும் ஆசிரியர்களின் வழிகாட்டுதலை பின்பற்றி வாழ்வில் முன்னேற்றம் காண வேண்டும் என வழக்கறிஞர் நங்கை நடராஜன் வாழ்த்தினார். விழா ஏற்பாடுகளை பள்ளியின் ஆசிரியர்கள் இரமேஷ், கபிரியேல், கணேசன் ஆகியோர் ஒருங்கினைத்தனர்.

# புதுக்கோட்டை மாவட்டத்தில் ஆபத்தான முறையில் இரு சக்கர வாகனத்தில் வீலிங் செய்த இரண்டு நபர்கள் சிறையில் அடைப்பு



புதுக்கோட்டை , நவ.15–

புதுக்கோட்டை மாவட்ட கண்காணிப்பாளர் வந்திதா பாண்டே உத்தரவின் பேரில் மாவட்டத்தில் ஆபத்தான முறையில் இரு சக்கர வாகனத்தில் வீலிங் செய்த இரண்டு நபர்கள் மீது நடிவடிக்கை எடுக்கபட்டு வழக்கு பதிவு செய்யபட்டுள்ளது.

மாவட்ட காவல்துறை சார்பில் வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

புதுக்கோட்டை மாவட்டத்தில் ஆபத்தான முறையில் இருசக்கர வாகனத்தில் வீலிங் செய்த 2 நபர்கள் மீது நடடிவடிக்கை எடுக்க புதுக்கோட்டை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் வந்திதா பாண்டே உத்தரவிடப்பட்டிருந்த நிலையில் கணேஷ்நகர் காவல் சரகத்தில் புதுக்கோட்டை அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனை அருகில் உள்ள துணைக்கோள் நகரத்தில் உள்ள சாலையில் கடந்த 13.11.23-ம் தேதக்கு முன்பு 19 வயதான புதுக்கோட்டை டவுன், எஸ்பி காம்ப்ளக்ஸ், கோல்டன் நகரரை சேர்ந்த ஹபி ரஹ்மான் என்பவரின் மகன் முகமது இர்பான் பதிவெண் இல்லாத இருசக்கர வாகனத்தின் முன்பகுதியில் வானில் சென்று வெடிக்கும் வெடியை கட்டிகொண்டு ஆபத்தான முறையில் வீலிங் செய்தவாறு பயணம் செய்துள்ளார். மேலும் இச்செயலை வீடியோவாக பதிவு செய்து இன்ஸ்டாகிராம் வலைதளத்தில் பதிவிட்டுள்ளார். மேற்படி சம்பவம் தொடர்பாக முகமது இர்பான் என்பவர் மீது பொதுமக்களுக்கு உயிர்சேதம் மற்றும் இடையூறு ஏற்படுத்தும் வகையிலும் தனிப்பட்ட பாதுகாப்பிற்கு ஆபத்து ஏற்படுத்தும் என தெரிந்தும் பார்வையாளர்களின் மனதில் பீதியை ஏற்படுத்தும் வகையில் செயல்பட்டதாக கணேஷ்நகர் காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்யபட்டு நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைக்கபட்டுள்ளார்.

மேலும் அன்னவாசல் காவல் சரகத்தில் அன்னவாசல் வழ கீரனூர் சாலையில் 2023-ம் ஆண்டிற்கு முன்பு இருசக்கர வாகனத்தில் ஆபத்தான முறையில் வீலிங் செய்து அதனை வீடியோவாக இன்ஸ்டாகிராம் வலைதளத்தில் பதிவிட்டுள்ள ஏதினிப்பட்டியை சேர்ந்த பழனிச்சாமி என்பவரின் 24 வயதான மகன் விக்னேஷ் மீது இருசக்கர வாகனத்தில் பைக் சாகசம் என்ற பெயரில்; இருசக்கர வாகனத்தை பொதுமக்கள் செல்லும் பொதுவான சாலையில் அபாயகரமாக ஓட்டியது சம்மந்தமாக அன்னவாசல் காவல் நிலையத்தில் வழக்குபதிவு செய்யப்பட்டு மேற்கண்ட நபர் கைது செய்யபட்டு நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைக்கபட்டுள்ளார். என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# புதுக்கோட்டை வைரம்ஸ் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் குழந்தைகள் தினவிழா கொண்டாட்டம்



புதுக்கோட்டை15

புதுக்கோட்டை வைரம்ஸ் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் நவம்பர் 14ம் தேதியான நேற்று குழந்தைகள் தினவிழா கொண்டாடப்பட்டது.

இவ்விழாவில் பள்ளியின் தலைவர் தேனாள் சுப்பிரமணியன், பள்ளியின் நிர்வாக ஒருங்கிணைப்பாளர் அஸ்வினி நாச்சம்மை, பள்ளியின் முதல்வர் சிராஜுதீன், பள்ளியின் துணை முதல்வர் சுப்பிரமணியன், மற்றும் ஆசிரியர்கள் கலந்து கொண்டனர். பள்ளியின் முதல்வா சிறப்புரையாற்றினார்.

பள்ளி ஆசிரியர்களின் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன. மாணவர்களுக்கான கேளிக்கைப் போட்டிகள் நடைபெற்று வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பள்ளியின் நிர்வாக ஒருங்கிணைப்பாளர் அஸ்வினி நாச்சம்மை பரிசுகளை வழங்கினார். குழந்தைகளுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டு விழா இனிதே நிறைவு பெற்றது.

# அரியலூரில் ஜவஹர்லால் நேரு பிறந்த நாள் விழா



அரியலூர்,நவ.15–

அரியலூரில் ஜவஹர்லால் நேரு பிறந்த நாள் விழா காங்கிரஸ் கட்சி சார்பில் கொண்டாடப்பட்டது.

ஆசிய ஜோதி என்று அழைக்கப்படும் முன்னாள் இந்திய பிரதமர் ஜவஹர்லால் நேருவின், 135 வது பிறந்தநாள் விழா காங்கிரஸ் கட்சி சார்பில் அரியலூரில் கொண்டாடப்பட்டது. அதையொட்டி அரியலூர் மாவட்ட காங்கிரஸ் கமிட்டியின் முன்னாள் தலைவர் சீனி பாலகிருஷ்ணன் தலைமையில், அக் கட்சியினர் அரியலூர் செட்டிஏரிக்கரையில் உள்ள காமராஜர் உருவ சிலைக்கு மாலை அணிவித்து, இனிப்பு வழங்கி கொண்டாடினர்.

இந்நிகழ்ச்சியில், காங்கிரஸ் கட்சியின் அரியலூர் நகரத் தலைவர் மாமு சிவக்குமார், ஒன்றியத் தலைவர் கர்ணன், நகரப் பொருளாளர் பிரஸ் செந்தில், மற்றும் ஓய்வு பெற்ற தொழில்கல்வி ஆசிரியர் நல்லப்பன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# குந்தைகள் தினத்தை புத்தகமில்லா தினமாக கொண்டாடிய புதுக்கோட்டை ஸ்ரீ வெங்கடேஸ்வரா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி



புதுக்கோட்டை,நவ.15–

புதுக்கோட்டை திருக்கோகர்ணம் ஸ்ரீ வெங்கடேஸ்வரா மெட்ரிக். மேல்நிலைப் பள்ளியில் பண்டிட் ஜவஹர்லால் நேரு பிறந்த நாள் விழா புத்தகமில்லா தினமாக கொண்டாடப்பட்டது, குழந்தைகளின் மீது அளவற்ற அன்பும் பாசமும் கொண்டிருக்கும், பள்ளியின் முதல்வர் கவிஞர் தங்கம் மூர்த்தி தலைமையில் குழந்தைகள் தின விழா நடைபெற்றது.

பள்ளிக்கு வருகை தந்த குழந்தைகளுக்கு ஆசிரியர்கள் மாலை அணிவித்தும் பூங்கொத்து கொடுத்தும் இனிப்புகள் வழங்கியும் வரவேற்றனர், குழந்தைகளைக் கொண்டாடுகின்ற இந்த நாளில் மாணவச் செல்வங்கள் வண்ண உடையணிந்து பள்ளி வளாகம் முழுவதும் மகிழ்ச்சியை விதைத்துச் சென்றனர், புத்தகமில்லா தினம் என்பதால் மாணவர்கள் பாடப்புத்தகங்கள், நோட்டுகள், எதுவுமில்லாமல் கைகளை வீசியபடி பள்ளிக்கு வந்தனர். பள்ளி முதல்வர் கவிஞர் தங்கம்மூர்த்தி தலைமையில் குழந்தைகளை மகிழ்விக்கும் வகையில் ஆசிரியர்கள் குழுக்களாகப் பிரிந்து பாடல், நாடகம், கண்ணைக் கவரும் வகையில் நடனம், நகைச்சுவை நிகழ்ச்சிகள், கதைகள் மற்றும் மாணவர்களுக்கான விளையாட்டுகள் என எராளமான நிகழ்ச்சிகளை நடத்தினர்.

இன்றைய நாள் முழுவதும் குழந்தைகள் தினத்தை புத்தகமில்லா தினமாக கொண்டாடி தங்களை மகிழ்ச்சியாக, உற்சாகமாக வைத்துக் கொண்டதற்கு ஆசிரியர்களுக்கு மாணவர்கள் நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டனர், இந்த நிகழ்வில் துணைமுதல்வர் குமாரவேல், ஒருங்கிணைப்பாளர்கள் கௌரி, அபிராமசுந்தரி, வரலெட்சுமி, கோமதிபிள்ளை, மற்றும் உதயகுமார், காசாவயல்கண்ணன், கணியன் செல்வராஜ் மற்றும் ஏராளமான ஆசிரியப்பெருமக்கள் கலந்து கொண்டு மாணவர்களுக்கு குழந்தைகள் தின வாழ்த்துகளை தெரிவித்தனர், நிகழ்வை ஆசிரியை சிவதர்சினி ஒருங்கிணைத்தார்.

# தெம்மாவூர் ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில் காளை உடல் நலக்குறைவால் உயிரிழப்பு பொதுமக்கள் அஞ்சலி



கந்தர்வகோட்டை, நவ.15–

புதுக்கோட்டை மாவட்டம் வடமலைநாடு தெம்மாவூர் முத்துமாரியம்மன் கோயில் காளை உடல் நல குறைவால் உயிரிழந்த நிலையில் காளையின் உடலுக்கு கிராம மக்கள் கண்ணீர் அஞ்சலி செலுத்தினர்

புதுக்கோட்டை மாவட்டம் வடமலைநாடு தெம்மாவூரில் உள்ள முத்துமாரியம்மன் கோயிலுக்கு சொந்தமான ஜல்லிக்கட்டு காளை புதுக்கோட்டை மாவட்டம் மட்டுமின்றி திருச்சி தஞ்சாவூர் உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களுக்கு சென்று வாடிவாசலில் களம் கண்டு மாடு பிடி வீரர்களின் பிடியில் சிக்காமல் அவர்களுக்கு சிம்ம சொப்பனமாக திகழ்ந்து வந்துள்ளது. இந்நிலையில் அந்த காளை கடந்த சில நாட்களாக உடல் நலக்குறைவால் அவதி அடைந்து வந்த நிலையில் நேற்று அந்த காளை பரிதாபமாக உயிரிழந்தது.

இந்த காளையின் உயிரிழப்பு அந்த கிராம மக்களை சோகத்தில் மூழ்கடித்த நிலையில் உயிரிழந்த கோயில் காளைக்கு அந்த கிராம மக்கள் மட்டுமின்றி சுற்றுவட்டார பகுதிகளை சேர்ந்த மக்களும் அதே போல் ஜல்லிக்கட்டு மாடு பிடி வீரர்கள் மற்றும் ஜல்லிக்கட்டு ஆர்வலர்கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர், பின்னர் அந்த காளையின் உடலை சிறிய ரக சரக்கு வாகனத்தில் ஏற்றி தாரை தப்பட்டை முழங்க பட்டாசு வெடித்து கிராமம் முழுவதும் ஊர்வலமாக அழைத்து சென்று கண்ணீர் மல்க அஞ்சலி செலுத்தி காளையின் உடலை அடக்கம் செய்தனர். ஊருக்கே செல்ல பிள்ளையாக வலம் வந்த வடமலைநாடு தெம்மாவூர் முத்துமாரியம்மன் கோயில் காளை உயிரிழந்த நிலையில் அந்தக் காளையின் உடலுக்கு மனிதர்கள் உயிரிழந்தால் எப்படி சடங்கு செய்வோமோ அதே போல் சடங்குகள் செய்து ஊர்வலமாக எடுத்துச் சென்றது அடக்கம் செய்தது தமிழர்களுக்கும் காளைக்கும் உள்ள பாசப்பிணைப்பை எடுத்துரைக்கும் வகையில் அமைந்தது.



அமராவதிபுதூர் ஸ்ரீ ராஜ ராஜன் சிபிஎஸ்இ பள்ளியில் குழந்தைகள் தின விழாவை முன்னிட்டு 247 மாணவ, மாணவிகள், 247 தமிழ் எழுத்துகளை 1 நிமிடத்தில் சொல்லி சாதனை படைத்தனர். உடன் பள்ளி முதல்வர் வடிவாம்பாள் மற்றும் ஆசிரியர்கள் உள்ளனர்.


PUDUGAI VARALARU - National Tamil Daily : Published by S.Sivasakthivel at Plot No.1103,Periyar Nagar, Rajagopalapuram Post,Pudukkottai-622003,TamilNadu State and Printed at V.C Printograph, 144,M.K Kottai Road, Elumalaiyan Rice Mill Complex, Ambigapuram, Ariyamangalam, Tiruchirappalli-620010, TamilNadu State. Editor: S.Sivasakthivel, Phone : 04322-261577, E.Mail: pudugaivaralaru@gmail.com.

வரலாறு விளையாட்டு

# ஐஸ்வர்யா ராய் குறித்து மோசமான கருத்து கூறிய பாக். முன்னாள் வீரர் மீது நெட்டிசன்கள் காட்டம்



**கராச்சி : நவ. 15,**

**பாகிஸ்தானின் உலகக் கோப்பை தோல்வி குறித்து கூறும்போது, ஐஸ்வர்யா ராய் குறித்து சர்ச்சைக்குரிய வகையில் கருத்து தெரிவித்த பாகிஸ்தான் முன்னாள் வீரர் அப்துல் ரசாக்குக்கு கடும் கண்டனங்கள் எழுந்து வருகின்றன.**

நடப்பு ஒருநாள் உலகக் கோப்பை கிரிக்கெட் தொடரில் பாகிஸ்தான் அணி 9 போட்டிகளில் 4-ல் மட்டுமே வெற்றி பெற்று லீக் சுற்றோடு வெளியேறியது. உலகக் கோப்பை தோல்வியைத் தொடர்ந்து பாகிஸ்தான் அணி மீது கடுமையான விமர்சனங்கள் எழுந்துள்ளன. பாபர் அஸமின் கேப்டன்ஷிப், சுழல்பந்து வீச்சாளர்களின் மோசமான ஆட்டம், பாகிஸ்தான் கிரிக்கெட் வாரிய சர்ச்சை என அனைத்தும் பாகிஸ்தான் கிரிக்கெட்டில் சர்ச்சையாக உருவெடுத்துள்ளது.

பாகிஸ்தான் முன்னாள் வீரர் அப்துல் ரசாக் நிகழ்ச்சி ஒன்றில் பேசும்போது, "தற்போது இருக்கும் ஃபார்மை கொண்டு உலகில் முன்னேறிய அணிகளை பாகிஸ்தான் வீழ்த்திவிடலாம் என்று நினைத்தால் அது நடக்காது. பாகிஸ்தான் அணிக்கு தற்போது ஒரு மன எழுச்சி தேவை. ஏனென்றால் இந்த உலகக் கோப்பையில் விளையாடிய ஷாஹீன் அப்ரிடி மற்றும் பாபர் அஸம் ஆகியோர் மிகவும் இளமையாக உள்ளதால், இந்த அணியே அடுத்த உலகக் கோப்பை வரை விளையாடும்" என்று பேசினார்.

இதே நிகழ்ச்சியில் முன்னாள் கேப்டன் யூனிஸ் கானின் எண்ணங்கள் குறித்து பேசும்போது, "அந்த காலங்களில் யூனிஸ் கான் ஒரு கேப்டனாக ஒரு நல்ல எண்ணம் கொண்டிருந்தார். அது எனக்கு சிறப்பாக செயல்பட நம்பிக்கையை அளித்தது. உண்மையில், பாகிஸ்தானில் வீரர்களை உருவாக்கி மெருகூட்ட வேண்டும் என்ற நல்ல எண்ணம்ளங்களுக்குஇல்லை. நீங்கள் ஐஸ்வர்யா ராயை திருமணம் செய்துகொண்டு ஒழுக்கமுள்ள குழந்தையை எதிர்பார்க்க விரும்பினால், அது ஒருபோதும் நடக்காது. நான் பேசுவது உங்களின் எண்ணத்தை பற்றி" என்று அப்துல் ரசாக் பேசினார். பாகிஸ்தான் முன்னாள் வீரர்கள் ஷாகித் அப்ரிடி, உமர் குல் போன்றோர் அப்துல் ரசாக் பேசியதை சிரித்து கைதட்டினர்.

எனினும், தவறான நோக்கத்தில் சொல்லப்பட்ட இந்தக் கருத்தை அடுத்து அப்துல் ரசாக்கை நெட்டிசன்கள் கடுமையாக சாடி வருகின்றனர். "இது மோசமான முன்னுதாரணம்" என்பது போன்று ரசிகர்கள் எதிர்ப்பை பதிவு செய்து வருகின்றனர்.

# உலகக் கோப்பையை வெல்ல

## இந்திய அணிக்கு பிரகாசமான வாய்ப்பு – ரவி சாஸ்திரி



**மும்பை : நவ. 15,**

**50 ஓவர் உலகக் கோப்பையை வெல்ல இந்திய கிரிக்கெட் அணிக்கு பிரகாசமான வாய்ப்பு உள்ளது என்று இந்திய அணியின் முன்னாள் கேப்டனும், முன்னாள் தலைமைப் பயிற்சியாளருமான ரவி சாஸ்திரி தெரிவித்துள்ளார்.**

இந்தியாவில் நடைபெற்று வரும் 50 ஓவர் உலகக் கோப்பை தொடர் தற்போது அரை இறுதியை எட்டியுள்ளது. இன்று மும்பையில் நடைபெறவுள்ள முதல் அரை இறுதியில் இந்தியா, நியூஸிலாந்து அணிகளும், நாளை கொல்கத்தாவில் நடைபெறவுள்ள 2-வது அரை இறுதியில் ஆஸ்திரேலியா, தென் ஆப்பிரிக்க அணிகளும் மோதவுள்ளன.

இந்நிலையில் இந்திய அணியின் நிலை குறித்து முன்னாள் கேப்டன் ரவி சாஸ்திரி கூறியதாவது: இந்த உலகக் கோப்பை கிரிக்கெட் தொடரில் இந்திய அணி சிறப்பாக விளையாடி வருகிறது. இந்திய அணி தற்போது மிகச் சிறந்த ஃபார்மில் இருக்கிறது.

தற்போது உலக கோப்பையை இந்திய அணி வெல்லாவிட்டால், இன்னும் 2 அல்லது 3 உலக கோப்பைகள் வரை நாம் காத்திருக்க வேண்டும். இந்திய அணியில் தற்போது விளையாடிக் கொண்டிருப்பவர்களில் 8-க்கும் மேற்பட்ட வீரர்கள் சிறந்த ஃபார்மில் உள்ளனர். அனைவரும் ஒருங்கிணைந்து விளையாடி வருவது இந்திய அணிக்கு சிறப்பான அம்சமாக உள்ளது. இப்படிப்பட்ட இந்திய அணி உலக கோப்பையை வெல்லாவிட்டால், அடுத்த இரண்டு, மூன்று உலக கோப்பையை நினைக்க வேண்டாம்.

பேட்டிங்கில் ரோஹித் சர்மா, விராட் கோலி, கே.எல்.ராகுல், சூர்யகுமார் யாதவ், ஸ்ரேயஸ் ஐயர், ஷுப்மன் கில் ஆகியோர் தங்களது பங்களிப்பை சிறப்பாக வழங்கி வருகின்றனர். ஒரு ஆட்டத்தில் சூர்யகுமார் யாதவ் பொறுப்பை உணர்ந்து விளையாடினார்.

அதேபோல் பந்துவீச்சில் ஜஸ்பிரீத் பும்ரா, மொகமது சிராஜ், மொகமது ஷமி, ரவீந்திர ஜடேஜா, குல்தீப் யாதவ் ஆகியோர் தங்கள் வாழ்நாளில் மிகச் சிறப்பான ஃபார்மில் இருக்கிறார்கள். எனவே, இந்திய அணி இந்த உலக கோப்பையை வெல்ல பிரகாசமான வாய்ப்பு இருக்கிறது. 2011-ல் நாம் உலகக் கோப்பையை வென்றோம். தற்போது 12 ஆண்டுகள் கழித்து உலகக் கோப்பையை இந்திய அணி வெல்வதற்கு அற்புதமான வாய்ப்பு வந்துள்ளது என்று ரவி சாஸ்திரி கூறினார்.

## சர்வதேச ஒரு நாள் கிரிக்கெட் போட்டி

# ஆப்கானிஸ்தான் வீரரின் ஓய்வு அறிவிப்பால் ரசிகர்கள் அதிர்ச்சி



**ஆப்கானிஸ்தான் : நவ. 15,**

**உலகக் கோப்பை கிரிக்கெட் தொடரில் அசத்திய ஆப்கானிஸ்தான் அணியின் வேகப்பந்து வீச்சாளர் நவீன் உல் ஹக் சர்வதேச ஒரு நாள் கிரிக்கெட் போட்டிகளில் இருந்துஓய்வுபெறப்போவதாக அறிவித்துள்ளது அவரது ரசிகர்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.**

ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் அணியின் இளம் வேகப்பந்து வீச்சாளர் நவீன் உல் ஹக். நடைபெற்று வரும் உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டியில் 8 விக்கெட்டுகளை கைப்பற்றிதனக்கெனரசிகர்கள் பட்டாளத்தை உருவாக்கிக் கொண்ட இளம் வீரர்.

24 வயதான நவீன் உல்-ஹக் ஆப்கானிஸ்தான் அணிக்காக 15 ஒருநாள் போட்டிகளில் விளையாடி 22 விக்கெட்களையும், 27 சர்வதேச டி20 போட்டிகளில் விளையாடி 34 விக்கெட்களையும் கைப்பற்றியுள்ளார்.

நடப்பு உலகக் கோப்பை கிரிக்கெட் தொடரில் பங்கேற்று விளையாடிய ஆப்கானிஸ்தான் அணி இந்தத் தொடரில் 4 வெற்றி, 5 தோல்வியுடன் அரைஇறுதி வாய்ப்பை இழந்தது. அத்துடன் உலகக்கோப்பைபோட்டிகளில் இருந்து வெளியேறியுள்ளது. இந்த போட்டியில் முன்னாள் உலக சாம்பியன்களான இங்கிலாந்து, பாகிஸ்தான், இலங்கை அணிகளை வீழ்த்தி ஆப்கானிஸ்தான் வரலாறு படைத்தது.

இந்நிலையில் அந்த அணியின் வேகப்பந்து வீச்சாளர் நவீன் உல்-ஹக் சர்வதேச ஒரு நாள் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார். இது அவரது ரசிகர்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

# இந்திய அணியை 4 நாக்–அவுட்களில் வீழ்த்திய நியூஸி. – முறியடிக்குமா திராவிட், ரோகித் கூட்டணி

**மும்பை : நவ. 15,**

**2023 உலகக் கோப்பை தொடர் அதன் உச்சக்கட்டத்தை நெருங்கியுள்ளது, இன்று மும்பை வான்கடே மைதானத்தில் இந்திய அணி மீண்டுமொரு முறை நாக்-அவுட் சுற்றில் நியூஸிலாந்து அணியை சந்திக்கவுள்ளது. கடந்த உலகக் கோப்பை அரையிறுதியில் சிறிய இலக்கை இந்திய அணி விரட்ட முடியாமல் போய் தோல்வி கண்டது. இறுதியில் இங்கிலாந்து - நியூஸிலாந்து போட்டி இருமுறை 'டை' ஆக, பவுண்டரிகள் அதிகம் அடித்த கணக்கில் இங்கிலாந்து சாம்பியன் என்று அறிவிக்கப்பட்டது.**

அனைத்து வடிவங்களிலும் நியூஸிலாந்து இதுவரை இந்திய அணியை 4 நாக் அவுட் போட்டிகளிலும் வென்றுள்ளது. இந்தப் புள்ளி விவரம் நாக் அவுட் போட்டிகளில் இந்திய அணியின் பலவீனத்தையும் நியூஸிலாந்தின் பலத்தையும் காட்டுகிறது. இந்த முறை இதனை முறியடிக்க நிச்சயம் ராகுல் திராவிட் - ரோஹித் கூட்டணி திட்டங்களை வகுத்திருக்கும் என்று நம்புவோமாக.

சர்ச்சைக்குரிய அந்த முடிவு நியூசிலாந்தின் கனவுகளைத் தகர்த்து விட்டது. காரணம், கடந்த 3 உலகக் கோப்பைகளிலும் நியூஸிலாந்து அணி போட்டித் தொடரை நடத்தும் அணியினால் தோற்கடிக்கப்பட்டு வெளியேறியதே நடந்துள்ளது, எனவே, இந்த முறை அவர்கள் போராட்டம் புதிய தாக்கம் பெறும். இங்குதான் இந்திய அணிக்கு அபாயம் காத்திருக்கிறது. இந்த முறை விட்டு விடக் கூடாது என்பதில் தெள்ளத் தெளிவாக கேன் வில்லியம்சன் படை இறங்கும் என்பதில் ஐயமில்லை.

இவ்வளவு தூரம் வந்த பிறகு நியூஸிலாந்திடம் தோற்பதா? நடக்காது என்று ரோஹித் படையும் திடமான மனநிலையில் களமிறங்கும் என்பதால் மிகப் பிரமாதமான ஒரு போட்டி காத்திருக்கிறது என்றுதான் கூற வேண்டும். இந்தியா வெல்வதானால் முதலில் டாஸை வெல்ல வேண்டும், இப்படிச் சொல்வதற்குக் காரணங்கள் உள்ளன. இந்த உலகக் கோப்பையில் வான்கடே மைதானத்தில் முதலில் பேட் செய்த அணியின் சராசரி ஸ்கோர் 357 ஆகும். சேசிங்கில் 188/9 என்பதே சராசரியாக உள்ளது. ஆனால், இந்த சராசரியை அன்று கிளென் மேக்ஸ்வெலின் டபுள் செஞ்சுரி உடைத்தது. மேக்ஸ்வெல் இன்னிங்ஸ் வாழ்விலே ஒருமுறை பாணி இன்னிங்ஸ். அதை வைத்து



பெருவாரியான போக்குகளை எடை போட முடியாது.

ஆகவே, இந்திய அணி டாஸ் வெல்வது முக்கியம். விளக்கொளியில் பந்துகள் ஸ்விங் ஆகின்றன. டாஸில் தோல்வி கண்டால் நியூஸிலாந்து அணியின் ஸ்கோர் விகிதத்தைக் கட்டுப்படுத்தும் பந்து வீச்சு, டைட்டான பீல்டிங் ஆகியவை தேவை. சேசிங் செய்யும் போது ஸ்விங் ஆகும் காலக்கட்டத்தில் டெஸ்ட் போட்டி போல் மரபான முறையில் இந்தப் போட்டியில் எச்சரிக்கையுடன் ஆடுவது நலம். இல்லையெனில் முதல் 15 ஓவர்களிலேயே அதிக விக்கெட்டுகளை இழந்து போட்டியை இழக்கும் வாய்ப்பு எந்த அணிக்கும் உள்ளது. கிரிக் இன்போ புள்ளி விவரங்களின் படி வான்கடேயி இந்த உலகக்கோப்பையில் முதல் 15 ஓவர்கள் சேசிங்கின் போது ஸ்விங் ஆகிறது. 20 ஓவர்கள் முடிந்தவுடன் பேட்டிங் வெகு சுலபமாகி விடுகின்றது என்பதைத்தான் அன்று மேக்ஸ்வில் ஆடும்போது பார்த்தோம், பந்துகள் ஒன்றுமே ஆகவில்லை.

2019 இந்திய அணியை விட இந்த இந்திய அணி வலுவானது, அனைத்துப் போட்டிகளிலும் வென்று தன்னம்பிக்கை லெவல் பெரிய அளவில் உள்ளது. எனவே நியூசிலாந்துக்குத்தான் கடினம். நியூசிலாந்தின் பேட்டிங் லைன் அப் நன்றாக உள்ளது, கான்வே, ரச்சின் ரவீந்திரா, டேரில் மிட்செல், சாண்ட்னர் வரை பேட் செய்கின்றனர். சாண்ட்னர் பவுலிங் ஒரு முக்கியப் பங்கு வகிக்கும். கடந்த உலகக்கோப்பையில் 10 ஓவர்களில் 34 ரன்கள் 2 விக்கெட்டுகளை அவர் கைப்பற்றினார், இந்த உலகக்கோப்பையிலும் இந்தியாவுக்கு எதிராக அன்ற்ய் 10 ஓவர் 37 ரன்கள் 1 விக்கெட். எனவே அவரது ஓவர்கள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவை.

நியூசிலாந்தைப் பொறுத்தவரை ரோஹித் சர்மா விக்கெட்டை தொடக்கத்தில் சாய்த்து விட்டால் இந்திய அணி கடும் பிரஷருக்குள் செல்வது உறுதி என்பதில் உறுதியாயிருப்பார்கள். முதலில் ரோஹித் சர்மாவுக்கு ஷார்ட் பிட்ச் எகிறு பந்தை வீசுவதை தவிர்க்க வேண்டும், எங்கு, எப்படி போட்டாலும் தூக்கத்தில் எழுப்பி ஆடச்சொன்னால் கூட எகிறு பந்துகளை சிக்சர் விளாசுபவர் அவர். ஆகவே அவரது பலத்தைக் கொண்டு அவரை பரீட்சிக்கக் கூடாது. அவரது பலவீனம் அவுட் ஸ்விங்கர், இன்ஸ்விங்கர் அதில்தான் அவரைச் சோதிக்க வேண்டும், ரோஹித்தை விரைவில் ஆட்டமிழக்கச் செய்து விட்டால் கோலியைக் கட்டிப்போட முடியும் இதுதான் நியூஸிலாந்தின் திட்டமாக இருக்க முடியும்.

இந்திய அணி சீராக ஆடவேண்டியது ட்ரெண்ட் போல்ட் பவுலிங்கில்தான். அவரிடம் அதிக விக்கெட்டுகளைக் கொடுத்தால் திண்டாட்டம்தான். அதே போல் நியூஸிலாந்துக்கு ஷமி, பும்ரா, சிராஜ் ஒரு பெரிய அச்சுறுத்தல் அவரை விட்டால் குல்தீப் யாதவ்.

ஆகவே, நியூஸிலாந்து அணி கடந்த 2019 உலகக் கோப்பை அரையிறுதியிலிருந்து ஊக்கம் பெற்றால், இந்திய அணி இந்த உலகக்கோப்பையில் ஆடிவரும் ஆக்ரோஷமான அணுகுமுறையில் ஊக்கம் பெற்றுள்ளது, எனவே இரு அணிகளுக்குமே சவால்தான். டாஸ் மிக முக்கியமானது.

வரலாறு சினிமா

# அரசியலும் காதலும் : மம்மூட்டி – ஜோதிகாவின் 'காதல் தி கோர்' ட்ரெய்லர் வெளியீடு



**கேரளா : நவ. 15,**

**மலையாளத்தில் மம்மூட்டி ஜோதிகா நடிப்பில் உருவாகியுள்ள 'காதல்-தி கோர்' படத்தின் ட்ரெய்லர் வெளியாகிரசிகர்களிடம்நல்ல வரவேற்பைபெற்றுவருகிறது. 54-வது கோவா சர்வதேச இந்தியத் திரைப்பட விழா இம்மாதம் மாதம் 20ம் தேதி தொடங்கி 28-ம் தேதி வரை கோவாவில் நடைபெறுகிறது. இந்தியன் பனோரமா பிரிவில் 26 திரைப்படங்கள் தேர்வாகியுள்ளன. மேலும் 21 குறும்படங்களும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.**

இந்நிலையில், மலையாளத்தில் மம்மூட்டி ஜோதிகா நடிப்பில் உருவாகியுள்ள 'காதல் -தி கோர்' படம் கோவா சர்வதேச இந்தியத் திரைப்பட விழாவில் திரையிடப்படவுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது. இந்தப் படத்தை 'தி கிரேட் இந்தியன் கிச்சன்' படத்தை இயக்கிய ஜியோ பேபி இயக்கியுள்ளார். இப்படம் மூலம் நீண்ட இடைவெளிக்குப் பிறகு மலையாளத்தில் ரீஎன்ட்ரி கொடுக்கிறார் ஜோதிகா. மேலும் முன்னணி நட்சத்திரமான மம்மூட்டியுடன் முதல் முறையாக நடித்துள்ளதால் ரசிகர்கள் மத்தியில் இப்படத்திற்கு எதிர்பார்ப்பு அதிகரித்துள்ளது.

சிலமாதங்களுக்கு முன்பே இந்த படத்தின் ஷூட்டிங் நிறைவுற்றதை அடுத்து இப்போது படத்தின் ரிலீஸ் தேதி அறிவிக்கப்பட்டுள்ளது. நவம்பர் 23ம் தேதி இந்த படம் ரிலீஸாக உள்ளதாக தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், இப்படத்தின் ட்ரெய்லர் வெளியாகி ரசிகர்களிடம் நல்ல வரவேற்பை பெற்று வருகிறது.


# உண்மை சம்பவ கதையில் ஜீ.வி.பிரகாஷ்

**சென்னை : நவ. 15,**

**ஜீ.வி.பிரகாஷ் குமார் இசை அமைத்து நடிக்கும் படம் 'ரெபல்'. அறிமுக இயக்குநர் நிகேஷ் ஆர்.எஸ். இயக்கத்தில் தயாராகும் இந்த படத்தில் மமிதா பைஜூ, கருணாஸ், சுப்ரமணிய சிவா, ஷாலு ரஹீம், வெங்கிடேஷ், ஆதித்யா பாஸ்கர், 'கல்லூரி' வினோத், ஆதிரா உள்ளிட்ட பலர் நடித்திருக்கிறார்கள்.**

அருண் ராதாகிருஷ்ணன் ஒளிப்பதிவு செய்திருக்கிறார். ஸ்டுடியோ கிரீன் சார்பில் ஞானவேல் ராஜா தயாரித்திருக்கிறார். படம் பற்றி இயக்குனர் நிகேஷ் கூறும்போது "இது கேரளா மற்றும் தமிழ்நாட்டு எல்லையில் நடந்த ஒரு உண்மை சம்பவத்தை தழுவி எடுக்கப்பட்டுள்ளது.

இதில் தமிழ் மக்களுக்காக போராடிய ஒரு இளைஞனாக ஜி.வி.பிரகாஷ் நடித்துள்ளார். வளர்ந்து வரும் மலையாள நடிகை மமிதா பைஜூ கதை நாயகியாக



நடித்துள்ளார்" என்றார். பாலக்காட்டில் மலையாள அரசியல்வாதிகளுக்கும், தமிழ் தொழிலாளர்களுக்கும் நடந்த மோதல் பின்னணியில் படம் உருவாகி இருப்பதை படத்தின் டீசர் வெளிப்படுத்துகிறது.

# 'இந்தியன் 2' படத்துக்காக நிறைய வலிகளை சந்தித்தேன் காஜல் அகர்வால் உருக்கம்



**சினிமா செய்தி : நவ. 15,**

**'இந்தியன் 2' படத்திற்காக உடல்ரீதியாக நிறைய கஷ்டங்களையும் சவால்களையும் சந்தித்தேன் என நடிகை காஜல் அகர்வால் உருக்கமாகத் தெரிவித்துள்ளார். காஜல் எடுத்த ரிஸ்க் அனைத்திற்கும் ரசிகர்கள் தங்களது பாராட்டுகளைத் தெரிவித்து வருகின்றனர்.**

ஷங்கர் இயக்கத்தில் நடிகர்கள் கமல்ஹாசன், பாபி சிம்ஹா, சித்தார்த், காஜல் அகர்வால், பிரியா பவானி ஷங்கர் உள்ளிட்டப் பலரும் நடித்திருக்கும் திரைப்படம் 'இந்தியன் 2'. அடுத்த வருடம் வெளியாகத் திட்டமிடப்பட்டிருக்கும் இந்தப் படத்தின் டீசர் சமீபத்தில் நடிகர் கமல்ஹாசனின் பிறந்தநாளை முன்னிட்டு வெளியானது. இதில், 'நாட்டில் நடக்கும் தவறுகளை இந்தியன் எங்கிருந்தாலும் தட்டிக் கேட்பான்' என்ற ஒன்லைனோடு இருந்த டீசர் ரசிகர்கள் மத்தியிலும் வரவேற்பைப் பெற்றது. முதல் பாகத்தில் நடிகை சுகன்யாவின் கதாபாத்திரத்தை இதில் நடிகை காஜல் ஏற்கிறார் என சொல்லப்படுகிறது.

ஆனால், சமீபத்தில் வெளியான டீசரில் கூட காஜலின் கதாபாத்திரம் காட்டப்படவில்லை. இந்தப் படத்திற்காக காஜல் களரி, குதிரை ஏற்றம் உள்ளிட்டப் பல விஷயங்களைக் கற்றுக் கொண்டார். இதுகுறித்து அவர் பகிர்ந்து கொண்டதாவது, "இந்தப் படத்திற்காக நான் களரி தற்காப்புகலை கற்றுக் கொண்டேன். அது உடல் ரீதியாக எனக்கு சவாலாக இருந்தது. உண்மையிலேயே அது ரொம்ப கஷ்டம். நிறைய வலிகளை சந்தித்தேன். ஆனால், முழுமையாக கற்றுக் கொண்ட பிறகு மகிழ்ச்சியும் திருப்தியும் கிடைத்தது" எனக் கூறியுள்ளார்.

# பிசியாகும் சஞ்சனா நடராஜன்

**சினிமா செய்தி : நவ. 15,**

**சமீபத்தில் 'வெளியான ஜிகிர்தண்டா டபுள் எக்ஸ்' படத்தில் மலைவாழ் ஆதிவாசி பெண்ணாகவும், எஸ்.ஜே.சூர்யாவை திருமணம் செய்து கொள்ளும் பெண்ணாகவும் நடித்தவர் சஞ்சனா நடராஜன்.**

அவரது நடிப்பை பார்த்துவிட்டு யார் இவர் என எல்லோரும் ஆச்சர்யப்படுகிறார்கள். இவர் இயக்குனர் பா. ரஞ்சித்தின் 'சர்பட்டா பரம்பரை' படத்தில் கலையரசன் ஜோடியாக நடித்தவர். அந்த படத்தில் அவரது நடிப்பு பேசப்பட்டது. அதில் அவர் வடசென்னை பெண்ணாக நடித்தார், இதில் அவர் ஆதிவாசி பெண்ணாக நடித்துள்ளார்.

இதனால் யாருக்கும் அவரை அடையாளம் தெரியவில்லை. தற்போது சஞ்சனா பிசியான குணசித்ர நடிகை ஆகிவிட்டார். தமிழில் 'பாட்டில் ராதா', பிஜாய் நம்பியாரின் 'போர்' மற்றும் மலையாளப் படமான 'டிக்கி டக்கா' படங்களில் நடித்து வருகிறார். "இப்போதெல்லாம் கதைதான் நாயகன், நாயகி எல்லாம். அந்த கதையில்



நாம் என்ன கதாபாத்திரத்தில் நடிக்கிறோமோ அதற்கு உண்மையாக இருக்க வேண்டும். உழைக்க வேண்டும். அது சிறிய கேரக்டரா, பெரிய கேரக்டரா என்பதெல்லாம் அப்புறம்தான். அப்படித்தான் எனது கேரக்டர்களை தேர்வு செய்கிறேன்" என்கிறார் சஞ்சனா.

## எஸ்.ஜே.சூர்யா இந்நாளின் திரை உலக நடிகவேள்

# ரஜினிகாந்த் பாராட்டு





**சென்னை : நவ. 15,**

**கார்த்திக் சுப்பராஜ் இயக்கத்தில் வெளியாகி திரையரங்குகளில் திரையிடப்பட்டுக் கொண்டிருக்கும் 'ஜிகர்தண்டா டபுள் எக்ஸ்' படத்தை நடிகர் ரஜினிகாந்த் பாராட்டியுள்ளார்.**

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கை: "ஜிகர்தண்டா XX படம் ஒரு குறிஞ்சி மலர். கார்த்திக் சுப்பராஜின் அற்புதமான படைப்பு, வித்தியாசமான கதை மற்றும் கதைக்களம். சினிமா ரசிகர்கள் இதுவரைக்கும் பார்க்காத புதுமையான காட்சிகள். 'லாரன்ஸால' இப்படியும் நடிக்க முடியுமா என்ற பிரம்மிப்பை நமக்கு உண்டாக்குகிறது. எஸ்.ஜே.சூர்யா இந்நாளின் திரை உலக நடிகவேள். வில்லதனம், நகைச்சுவை, குணசித்திரம் என மூன்றையும் கலந்து அசத்தி இருக்கிறார்.

திருவோட கேமரா விளையாடி இருக்கிறது. கலை இயக்குநரின் உழைப்பு பாராட்டிற்குரியது. 'திலீப் சுப்ராயனின்' சண்டை காட்சிகள் அபாரம். 'சந்தோஷ் நாராயணன்' வித்தியாசமான படங்களுக்கு வித்தியாசமாக இசை அமைப்பதில் மன்னர். இசையால் இந்த படத்திற்கு உயிரூட்டி, தான் ஒரு தலைசிறந்த இசையமைப்பாளர் என்பதை இந்த படத்தில் நிரூபித்து இருக்கிறார்.

இந்தப் படத்தை இவ்வளவு பிரம்மாண்டமாக எடுத்திருக்கும் தயாரிப்பாளருக்கு என்னுடைய தனி பாராட்டுகள். படத்தில் வரும் பழங்குடிகள் நடிக்கவில்லை, வாழ்ந்து இருக்கிறார்கள். நடிகர்களுடன் போட்டிபோட்டு கொண்டு யானைகளும் நடித்து இருக்கின்றன. செட்டானியாக நடித்து இருக்கும் விதுவை எவ்வளவு பாராட்டினாலும் தகும், அற்புதம். இந்தப் படத்தில் கார்த்திக் சுப்பராஜ் மக்களை கைதட்ட வைக்கிறார், பிரமிக்க வைக்கிறார், சிந்திக்க வைக்கிறார், அழவும் வைக்கிறார். i am proud of you கார்த்திக் சுப்பராஜ். My hearty congratulations to கார்த்திக் சுப்பராஜ் and team" என்று ரஜினிகாந்த் தெரிவித்துள்ளார்.

# வரலாறு உலகம்

## 1,000 பேரை பிணைக் கைதிகளாக பிடித்து வைத்திருந்த ஹமாஸின் முக்கிய தளபதி அகமது சியாம் கொல்லப்பட்டார்



**ஜெருசலேம் : நவ. 15,**

**ஹமாஸ் அமைப்பின் முக்கிய தளபதியான அகமது சியாம் வான்வழித் தாக்குதலில் கொல்லப்பட்டதாக இஸ்ரேல் பாதுகாப்பு படை (ஐடிஎஃப்) அறிவித்துள்ளது. இவர், 1,000 பேரைபிணைக் கைதிகளாக பிடித்து வைத்திருந்தவர் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து இஸ்ரேலிய பாதுகாப்பு படை எக்ஸ் வலைதளத்தில் கூறியுள்ளதாவது:**

இஸ்ரேல் தாக்குதலுக்கு மூளையாக செயல்பட்ட ஹமாஸ் அமைப்பின் முக்கிய மூத்த தளபதிகளில் ஒருவரான அகமது சியாம் இஸ்ரேல் படைகள் நடத்திய வான்வழித் தாக்குதலில் கொல்லப்பட்டார். இவர், ராண்டிசிமருத்துவமனையில் நோயாளிகள் உள்ளிட்ட 1,000-க்கும் மேற்பட்டோரை பிணைக் கைதிகளாக சிறைப்பிடித்திருந்தார். காசா மக்கள் தெற்கு நோக்கி வெளியேற விடாமல் தடுத்ததில் அகமது சியாமுக்கு முக்கிய பங்கு உண்டு. மேலும், சுரங்கப் பாதையில் பயங்கரமான ஆயுதங்களையும் அவர் மறைத்து வைத்திருந்தார்.

ஹமாஸின்நாசர்ரத்வான் கம்பெனி படைப்பிரிவின் தளபதியாக செயல்பட்டு வந்தவர் அகமது சியாம். காசாவில் பொதுமக்களை மனிதக்கேடயங்களாகப் பயன்படுத்தி வந்தஅகமது சியாமின் ரகசிய இருப்பிடம் குறித்து ஷின் பெட் மற்றும் ராணுவபுலனாய்வு இயக்குநரகம் அளித்த உளவு தகவல்களின் அடிப்படையில் கிவாடி பிரிகேட் படையினரின் வழிகாட்டுதலின் பேரில் நடத்தப்பட்ட வான்வழித் தாக்குதலில் அவர் கொல்லப்பட்டுள்ளார் என்று ஐடிஎஃப் தெரிவித்துள்ளது.

ஆனால், இஸ்ரேல் பாதுகாப்பு படை அகமது சியாம் மீது தெரிவித்த குற்றச்சாட்டுகளுக்கு ஹமாஸ் அமைப்பு மறுப்பு தெரிவித்துள்ளது. கடந்த அக்டோபர் மாதம் 7-ம் தேதி ஹமாஸ்படைகள் திடீரென இஸ்ரேலுக்குள் புகுந்து தாக்குதல் நடத்தி 1,000-க்கும் மேற்பட்டோரை சுட்டுக் கொன்றது.

இதையடுத்து, இஸ்ரேல் ராணுவம் நடத்திய பதிலடி தாக்குதலில் ஆயிரக்கணக்கான குழந்தைகள்உள்ளிட்ட 11,000 பாலஸ்தீனர்கள் இதுவரை கொல்லப்பட்டுள்ளதாக காசா சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது. இதில், ஹமாஸ் அமைப்பின் முக்கிய தளபதிகளாக விளங்கிய அலி காதி, முயதாஸ் ஈத், ஜாகாரியா அபு மாமர், ஜோத் அபு ஷ்மலா, பெலால் அல்காத்ரா, மெராட் அபு மெராட் உள்ளிட்டவர்களும் அடங்குவர்.

## மருத்துவமனை அடியில் ஹமாஸ் போராளிகளின் ரகசிய பதுங்கு தளம் வீடியோ வெளியிட்டு அம்பலப்படுத்தும் இஸ்ரேல்



**காசா : நவ. 15,**

**பொதுமக்களுக்கான குடியிருப்புகள், பள்ளிகள், அகதிகள் முகாம் மற்றும் மருத்துவமனைகளை பயன்படுத்தி, இஸ்ரேலுக்கு எதிரான பயங்கரவாதத் தாக்குதல்களை ஹமாஸ் மேற்கொள்வதாக இஸ்ரேல் தொடர்ந்து குற்றம்சாட்டி வந்தது. தற்போது அதற்கான ஆதாரமாக வீடியோ ஒன்றையும் இஸ்ரேல் ராணுவம் வெளியிட்டுள்ளது.**

அக்.7 அன்று இஸ்ரேல் மீதான ஹமாஸ் ஆயுதக் குழுவின் கொடூரத் தாக்குதலை அடுத்து, இஸ்ரேல் பாதுகாப்பு படைகளின் காசா மீதான தாக்குதல் நடவடிக்கைகள், ஒரு மாதத்தை கடந்தும் தொடர்ந்து வருகின்றன. காசா மீதான இஸ்ரேலின் தாக்குதல் நடவடிக்கைகள் சர்வதேச நாடுகள் மத்தியில் கடுமையான கண்டனத்துக்கும் ஆளாகி வருகின்றன.

காசாவின் பள்ளிகள், மருத்துவமனைகள், மதவழிபாட்டுத் தலங்கள், குடியிருப்பு பகுதிகள் மற்றும் அகதிகள் முகாம்களை குறிவைத்து இஸ்ரேல் தொடர் தாக்குதல் நடத்தி வருவதாக அவை குற்றம்சாட்டின. இதனால் கொத்துக்கொத்தாக கொல்லப்படும் அப்பாவி பொதுமக்களின் எண்ணிக்கை 11 ஆயிரத்தை தொட்டுள்ளது. அவர்களில் 40 சதவீதத்தினர் குழந்தைகள் மற்றும் என்பது அதிர்ச்சி அளித்துள்ளது.

ஹமாஸ் ஆயுதக் குழுவினருக்கு எதிரான நடவடிக்கை என்ற பெயரில் இஸ்ரேல் இன அழித்தொழிப்பை மேற்கொள்வதாக சர்வதேச ஊடகங்கள் மத்தியில் கண்டனங்கள் அதிகரித்தன. தங்கள் தரப்பை நியாயப்படுத்த இஸ்ரேல் பலவகையிலான விளக்கங்களை அளித்து வருகிறது.

ஹமாஸின் ஆயுதக் குழுவான அல்-கஸாம், காசாவின் குடியிருப்புகள், மருத்துவமனைகள், அகதிகள் முகாம் ஆகிய இடங்களில் பதுங்கி இருப்பதாகவும், பொதுமக்களை கேடயமாக அவர்கள் பயன்படுத்துவதால் உயிர்ப்பலிகள் அதிகரிப்பதாகவும் இஸ்ரேல் விளக்கம் தந்தது.

தற்போது தங்கள் தரப்புக்கு வலுசேர்க்கும் வகையில், ஹமாஸின் ஆயுதக் குழுவினர் எவ்வாறு சுரங்கப் பாதைகளை அமைத்து மருத்துவமனை ஒன்றைஙகள்மறைவிடமாக பயன்படுத்தினார்கள் என்றும், அங்கே இஸ்ரேலின் பிணைக்கைதிகளைஎவ்வாறு அடைத்து வைத்திருந்தனர் எனவும், 6 நிமிடங்களுக்கு நீளும் வீடியோ ஒன்றினை வெளியிட்டு பரபரப்பு கிளப்பி உள்ளது.

குண்டு துளைக்காத தரை திறப்புக்கு கீழே 20 மீ ஆழத்தில் அமைந்திருக்கும் சுரங்கப்பாதை, அவை மருத்துவமனையின் தரைகீழ் தளத்துடன் இணைக்கப்பட்டிருப்பது ஆகியவை அந்த வீடியோவில் விளக்கப்படுகின்றன. சந்தேகம் எழாதிருப்பதற்காக பள்ளி வளாகம், ஐநா அலுவலகம் ஆகியவை அமைந்திருக்கும் பகுதியில் ஹமாஸ் ஆயுதக் குழுவினர் பதுங்கி செயல்பட்டதையும் அந்த வீடியோ விவரிக்கிறது. இந்த வீடியோ சமூக ஊடகங்களில் வைரலாகி வருகிறது.

## காசா மருத்துவமனைகள் கட்டாயமாக பாதுகாக்கப்பட வேண்டும் : ஜோ பைடன்



**காசா : நவ. 15,**


**ஹமாஸ்-இஸ்ரேல் போர் உக்கிரமடைந்த வரும் நிலையில், காசா பகுதியில் உள்ள மருத்துவமனைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என அமெரிக்க அதிபர் ஜோ பைடன் தெரிவித்துள்ளார்.**

காசாவில் உள்ள மிகப்பெரிய மருத்துவமனையாக அல்-ஷிபா மருத்துவமனை கருதப்படுகிறது. இந்த மருத்துவமனையில் நூற்றுக்கணக்கானோர் சிகிச்சை பெற்று வரும் நிலையில், பல பொதுமக்கள் தஞ்சம் அடைந்துள்ளனர். இந்த நிலையில் அல்-ஷிபா மருத்துவமனை இஸ்ரேல் ராணுவத்தால் சுற்றி வளைக்கப்பட்டுள்ளது.

மருத்துவனைக்கு வெளியே ஹமாஸ் அமைப்பினருக்கும் இஸ்ரேல் ராணுவத்தினருக்கும் இடையில்சண்டைநடைபெற்று வருகிறது. இதற்கிடையே மருத்துவமனையில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்பட்டு செயல் இழக்கும் அபாய நிலை ஏற்பட்டுள்ளது. இன்குபெட்டரில் சிகிச்சை பெற்று வரும் குழந்தைகள் உயிரிழந்து வருகின்றனர். இஸ்ரேல் - ஹமாஸ் போர் ஒரு மாதத்துக்கும் மேலாக நீடிக்கும் நிலையில் பிணைக் கைதிகளை விடுவிக்குமாறு ஹமாஸுடன் இஸ்ரேல் பேரம் பேசி வருவதாக தகவல் உள்ளது. இஸ்ரேல் - ஹமாஸ் போர் காரணமாக இதுவரை காசாவில் ஆயிரக் கணக்கான குழந்தைகள் உள்பட 10 ஆயிரத்துக்கும் அதிகமானோர் இறந்துள்ளனர். இஸ்ரேலில் இதுவரை 1,200 பேர் இறந்துள்ளனர். 200-க்கும் மேற்பட்டோர் அங்கிருந்து பிணைக் கைதிகளாகப் பிடித்துச் செல்லப்பட்டனர்.

இந்த நிலையில் அமெரிக்க அதிபர் ஜோ பைடன்செய்தியாளர்களிடம்,” மருத்துவமனையை பொறுத்தவரை குறைவான ஊடுருவல் நடவடிக்கை இருக்கும் என்பது என்னுடைய நம்பிக்கை மற்றும் எதிர்பார்ப்பு. நாங்கள் இஸ்ரேலுடன் தொடர்பில் இருக்கிறோம். பிணைக்கைதிகளை விடுவிப்பது தொடர்பாகவும் பேச்சுவார்த்தை நடந்து வருகிறது. காசாவில் உள்ள மருத்துவமனைகள் கட்டாயமாக பாதுகாக்கப்பட வேண்டும்” என்று தெரிவித்தார்.

## புதிதாக நியமிக்கப்பட்ட பிரிட்டன் வெளியுறவு அமைச்சருடன் ஜெய்சங்கர் சந்திப்பு



**புதுடெல்லி : நவ. 15,**

**புதிதாக நியமிக்கப்பட்ட பிரிட்டன் வெளியுறவு அமைச்சர் டேவிட் கேமரூனை சந்தித்தார் இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர்.**

முன்னதாக நேற்று காலை அமைச்சர் ஜெய்சங்கர் பிரிட்டன் வெளியுறவு அமைச்சரை சந்திக்க திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால், அப்போது ஜேம்ஸ் க்ளெவர்லி தான் வெளியுறவு அமைச்சராக இருந்தார். ஆனால் பிரிட்டன் அமைச்சரவை மாற்றம் செய்யப்பட்டபோது கிளவர்லி உள்துறை அமைச்சராகவும், அவர் வகித்த வெளியுறவுத் துறைக்கு டேவிட் கேமரூன் அமைச்சராகவும் நியமிக்கப்பட்டனர். இந்நிலையில் நேற்றைய சந்திப்பு புதிய அமைச்சர் கேமரூடன் நிகழ்ந்துள்ளது.

இது குறித்து அமைச்சர் ஜெய்சங்கர் தனது ட்விட்டர் பக்கத்தில், “புதிய வெளியுறவு அமைச்சராகப் பொறுப்பேற்றுள்ள டேவிட் கேமரூனுக்கு எனது வாழ்த்துகள். அவருடன் இரு நாட்டு நல்லுறவு, ஒத்துழைப்பு குறித்து விரிவான ஆலோசனை மேற்கொள்ளப்பட்டது” என்று பதிவிட்டுள்ளார்.

முன்னதாக நான்குநாள் அரசுமுறை பயணமாக இங்கிலாந்து சென்றுள்ள வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர், லண்டனில் உள்ள ஸ்ரீ சுவாமிநாராயண் கோயிலில் தீபாவளி கொண்டாடினார். அன்றைய தினம் அவர் பிரிட்டன் பிரதமர் ரிஷி சுனக்கை சந்தித்துப் பேசினார்.

பின்னர் செய்தியாளர்களை சந்தித்த அவர், ”இங்கிலாந்து மற்றும் இந்தியா இடையிலான உறவுகளைப்பற்றி விவாதிக்க எங்களுக்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது. இந்தியா இன்று மிக வேகமாக வளரும் பெரிய பொருளாதாரமாக உள்ளது. பாரதத்தின் மீதான பார்வை எவ்வளவு மாறிவிட்டது என்பதை நான் தற்போது காண்கிறேன்” என்று கூறியிருந்தது கவனிக்கத்தக்கது.

## அமெரிக்காவில் பட்டப்படிப்பு
## இந்திய மாணவர்கள் முதலிடம்



**புதுடெல்லி : நவ. 15,**

**இன்ஸ்டிடியூட் ஆஃப் இன்டர்நேஷனல் எஜுகேஷன் (ஐஐஇ), அமெரிக்காவில் சர்வதேச பட்டதாரி மாணவர்கள் குறித்த ஓபன் டோர்ஸ் என்ற ஆய்வறிக்கையை நேற்று முன்தினம் திங்கள்கிழமை வெளியிட்டது. அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:**

அமெரிக்க கல்வி நிறுவனங்களில் 2022-23-ம் கல்வியாண்டில் மொத்தம் 2,68,923 இந்திய மாணவர்கள் பல்வேறு பட்டப்படிப்புகளில் சேர்ந்து கல்வி பயின்று வருகின்றனர். 2009-10-ம் ஆண்டுக்குப் பிறகு தற்போதுதான் இந்திய மாணவர்களின் எண்ணிக்கை சீனாவை விஞ்சியுள்ளது குறிப்பிடத்தக்கது.

இந்தியாவில் இருந்து அமெரிக்காவுக்கு கல்வி பயில வரும் மாணவர்களின் எண்ணிக்கை 2022-23-ம் கல்வியாண்டில் 35 சதவீதம் அதிகரித்து 2,68,923-ஆக உயர்ந்துள்ளது. அமெரிக்காவில் படிக்கும் 10 லட்சம் வெளிநாட்டு மாணவர்களில் 25 சதவீதத்துக்கும் அதிகமானோர் இந்திய மாணவர்களாக உள்ளனர்.

2022-23-ல் பட்டதாரி மாணவர்களின் எண்ணிக்கை 63 சதவீதம் அதிகரித்து 1,65,936-ஆக உள்ளது. இது, 2021-22 ஆண்டுடன் ஒப்பிடும்போது 64,000 மாணவர்கள் அதிகம். அதேபோன்று, இளங்கலை மாணவர்களின் எண்ணிக்கையும் 16 சதவீதம் உயர்ந்துள்ளது.

ஓபிடி எனப்படும் விருப்பமான நடைமுறைப் பயிற்சியை மேற்கொண்ட தனிநபர்களின் எண்ணிக்கையில் இந்தியா (69,062 பேர்) முன்னணியில் உள்ளது. ஓபிடி என்பது ஒரு வகையான தற்காலிக பணிக்கான அனுமதியாகும்.

2023 ஜூன் முதல் ஆகஸ்ட் வரையிலான காலத்தில் இந்தியாவில் உள்ள அமெரிக்க தூதரகம் இந்திய மாணவர்களுக்காக எஃப், எம் மற்றும் ஜே வகையைச் சேர்ந்த 95,269 விசாக்களை வழங்கி சாதனை படைத்துள்ளது. இது, முந்தைய 2022-ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 18 சதவீதம் அதிகம்.

இந்திய மாணவர்கள் அமெரிக்காவில் சரியான மற்றும் தகுதியான படிப்பு வாய்ப்புகளை கண்டறிவதற்காக டெல்லி, சென்னை, கொல்கத்தா, மும்பை, ஹைதராபாத் ஆகிய நகரங்களில் ஆலோசனை மையங்கள் அமைக்கப்பட்டு சேவைகள் வழங்கப்பட்டு வருகிறது. இதன் மூலம், 4,500-க்கும் மேற்பட்ட அங்கீகாரம் பெற்ற அமெரிக்க உயர்கல்வி நிறுவனங்களில் உள்ள சிறந்த படிப்பு திட்டங்களை விரைவாகவும், துல்லியமாகவும் இந்திய மாணவர்கள் கண்டறிவது எளிதாகி உள்ளது என்று ஐஐஇ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இஸ்ரேலின் தாக்குதலில் 102 ஐ.நா பணியாளர்கள் மரணம் மருத்துவமனை, பள்ளிகள் மீது நேரடி தாக்குதல்




**காசா : நவ. 15,**

**ஐ.நா. நடத்தும் மருத்துவமனைகள், பள்ளிகளை இஸ்ரேல் ராணுவம் நேரடியாக தாக்கியுள்ளதாக ஐ.நா. வின் மீட்பு மற்றும் நிவாரண அமைப்பு குற்றம் சாட்டியுள்ளது. காசாவில் இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் இதுவரை 102 ஐ.நா. பணியாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.**

டாங்கிகளுடன் தங்களது வளாகத்திற்குள் இஸ்ரேல் ராணுவம் நுழைந்துள்ளதாக ஐ.நா. தெரிவித்துள்ளது. அங்கு தங்களது தளவாடங்களை அமைத்து அங்குபணியில்இருப்பவர்கள் வலுக்கட்டாயமாக வெளியேற்றுவதாகவும் ஐ.நா. வேதனை தெரிவித்துள்ளது. ஐ.நா. நடத்தும் மருத்துவமனையில் நடத்தபட்ட தாக்குதலில் 5 பேர் கொல்லபட்டதாகவும் தெரிவிக்கபட்டுள்ளது.

பொதுமக்கள் மீது தக்குதல் நடத்தபடுவது பன்னாட்டு விதிகளை மீறும் செயல் என ஐ.நா. வின் மீட்பு மற்றும் நிவாரண அமைப்பு கூறியுள்ளது. காசாவில் இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் கொல்லபட்ட 102 ஐ.நா. பணியாளர்களுக்கு ஐ.நா. அவையில் இரங்கல் தெரிவிக்கபட்டது. ஐ.நா. பொது அவையில் உள்ள கொடி கம்பத்தில் ஐ.நா.வின் கொடி அரை கம்பத்தில் பறக்கவிடபட்டு மரியாதை செலுத்தபட்டது.

காசாவில் மனிதாபிமான பணிகளில்ஈடுபட்டுஉயிர்நீத்த ஐ.நா.பணியாளர்களுக்கும் அவர்களது குடும்பத்தினருக்கும் இரங்கல் தெரிவிக்கபட்டது. ஐ.நா. உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று மௌன அஞ்சலி செலுத்தினர். இதேபோன்று ஐ.நா.வின் பிற அலுவலகங்கள் முன்பும் அரை கம்பத்தில் கொடி பறக்கவிடப்பட்டு மரியாதை செலுத்தப்பட்டது.

கடந்த அக்டோபர் 7ம் தேதி காசாவிலிருந்து ஹமாஸ் அமைப்பு இஸ்ரேல் மீது நடத்திய தாக்குதலில் நூற்றுக்கணக்கானோர் உயிரிழந்தனர். இதற்குப் பதிலடி கொடுக்கும் வகையில் இஸ்ரேல் அதிதீவிரமான தாக்குதலை நடத்தி வருகிறது. இப்படியாக இரு தரப்பிலிருந்து ஆயிரக்கணக்கான உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளன. இதனிடையே காசாவை சுற்றி வளைத்து தனது பீரங்கி குண்டுகளால் காசா நகரையே இஸ்ரேல் நிர்மூலமாக்கிக் கொண்டிருக்கிறது.

தரைவழித் தாக்குதலைத் தீவிரப்படுத்திய இஸ்ரேல் கிட்டதட்ட அனைத்து தொலைத்தொடர்பு சேவைகளை அழித்து உலகத்திலிருந்து காசாவை தனிமைப்படுத்தியுள்ளது. ஹமாஸ் அமைப்பினரை ஒருவர் விடாமல் அழிக்க நினைக்கும் இஸ்ரேலின் தாக்குதலில் ஆயிரக்கணக்கான அப்பாவி பாலஸ்தீன மக்கள் தினந்தோறும் கொல்லப்பட்டு வருகின்றனர். அதில் 60 சதவீதம் பேர் பெண்களும், குழந்தைகளும் எனக் கூறப்படுகிறது.

இந்நிலையில் காசாவின் மிகப்பெரிய மருத்துவமனை கிட்டத்தட்ட ஒரு கல்லறை என உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது. காசாவின் மிகப்பெரிய மருத்துவமனையான அல் ஷிபா மருத்துவமனை மீது இஸ்ரேல்நடத்தியதாக்குதலில் உயிரிழந்தவர்களின் சடலங்கள் மருத்துவமனை வளாகத்திலேயே அதிகப்படியாக குவிந்துள்ளது. தொடரும் போர் சூழல் அங்குள்ள மக்களுக்கு அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

## நியூயார்க்கில் படுக்கை அறையில் இறந்து கிடந்த டொனால்ட் டிரம்பின் சகோதரி



**நியூயார்க் : நவ. 15,**

**முன்னாள் அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்பின் சகோதரி மேரியன் டிரம் பேரி காலமானார். அவருக்கு வயது 86.**

நியூயார்கின் புறநகர் பகுதியான மான்ஹாட்டனில் வசித்து வந்த மேரியன் நேற்று முன்தினம் திங்கள்கிழமை காலை தனது வீட்டில், தனது படுக்கை அறையில் மயங்கிய நிலையில் கிடந்துள்ளார். இதுகுறித்து தகவல் அறிந்த நியூயார்க் நகர போலீஸார், அவரது வீட்டிற்கு சென்று பார்த்து அவர் உயிரிழந்ததை உறுதி செய்தனர்.

அவரது இறப்புக்கான காரணம் என்ன என்பது இதுவரை உறுதி செய்யப்படவில்லை. முதற்கட்ட விசாரணையில் மேரியன் கார்டியக் அரெஸ்ட் காரணமாக உயிரிழந்திருக்கலாம் என கூறப்படுகிறது. வேறு, எந்த அசம்பாவிதமும் நடந்ததற்கான தடயங்கள் ஏதுமில்லை என்றும் போலீஸார் தெரிவித்துள்ளனர்.

முன்னாள் அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்பின் மூத்த சகோதரியான இவர் கடந்த 1983-ம் ஆண்டு நியு ஜெர்சியில் பெடரல் ஜட்ஜாக இருந்து, கடந்த 2019-ம் ஆண்டு ஓய்வு பெற்றவர். சகோதரியின் இறப்பு குறித்து டொனால்ட் டிரம்ப் இதுவரை எந்த அறிக்கையும், இரங்கலும் தெரிவிக்கவில்லை என கூறப்படுகிறது.

கடந்த 2020-ம் ஆண்டு இவர் தனது சகோதரரும், அமெரிக்க அதிபருமாக இருந்த டொனால்ட் டிரம்ப் குறித்து பரபரப்பு கருத்தை தெரிவித்திருந்தார். அதாவது, தனது குடும்பம் எப்படி உலகின் ஆபத்தான மனிதனை உருவாக்கியுள்ளது என தெரிவித்திருந்தார்.

இது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது. அதேபோல், தன்னைக் கடைசி வரை மறக்காமல் இருக்க வேண்டும் என்றும் அவர் டிரம்புக்கு கோரிக்கை வைத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## இந்தியாவுக்கு நிம்மதி இலங்கையில் கால் பதிக்கும் அமெரிக்கா



**அமெரிக்கா : நவ. 15,**

**இலங்கையில் சீனாவின் ஆதிக்கத்தை முடக்கும் வகையில் அமெரிக்கா புதிய திட்டத்தை மேற்கொண்டு வருவது உலக நாடுகள் மத்தியில் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ள நிலையில் இந்தியாவுக்கு பாதுகாப்பான சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.**


உள்நாட்டுப் போரினால் பாதிக்கப்பட்ட இலங்கை, அதன் விளைவாக மிகப்பெரிய பொருளாதார நெருக்கடியை சந்தித்துள்ளது. போரினால் பாதிக்கப்பட்ட இலங்கையின் துறைமுகங்களை மேம்படுத்தும் பணியில் சீனா மிகப்பெரிய முதலீடு செய்து இலங்கைக்கு உதவுவது போல இலங்கையின் துறைமுகங்களை கிட்டத்தட்ட தன் வசப்படுத்தும் சூழ்நிலையில் உள்ளது. தன்னுடைய ஆராய்ச்சிக் கப்பல்களையும் இந்தியாவின் எதிர்ப்பையும் மீறி இலங்கைத் துறைமுகத்திற்கு சீனா கொண்டு வந்துள்ளது.

இந்த நிலையில் இலங்கையின் துறைமுக மேம்பாட்டிற்கு உதவிசெய்யும் புதிய திட்டத்தை அமெரிக்க முன்னெடுத்துள்ளது. சீனாவுடன் போட்டியிடும் வகையில் இலங்கையின் கொழும்பு துறைமுகத்தில் ஆழ்கடல் கப்பல் கொள்கலன் முனையத்தை நிர்மாணிப்பதற்காக 553 மில்லியன் டாலர் திட்டத்தை அமெரிக்கா அறிவித்துள்ளது. இலங்கையில் அமெரிக்கா மேற்கொள்ளும் மிகப்பெரிய முதலீடு இது ஆகும்.

கடுமையான நிதி மற்றும் பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு இலங்கை போராடிவரும் நிலையில் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது. இலங்கைக்கு இது மகிழ்ச்சியையும், சீனாவிற்கு அதிர்ச்சியையும் கொடுத்துள்ளது. கொழும்பு துறைமுகம் 2021ம் ஆண்டு முதல் இயங்கி வருகிறது. மேலும் இந்தப் புதிய முனையம் வங்காள விரிகுடாவில் இலங்கைக்கு பெரிய பொருளாதார வளர்ச்சியை கொடுக்கும்.

பசிபிக் கடலிலும், சீனக் கடலிலும் ஆதிக்கம் செலுத்தும் அமெரிக்கா, தற்போது இந்திய பெருங்கடலில் காலடி எடுத்து வைத்துள்ளது. சீனாவின் ஆதிக்கத்திற்கு இது முற்றுப்புள்ளியாக அமையும் என்று கூறப்படுகிறது. இன்னொரு பக்கம் இது இந்தியாவிற்கு மகிழ்ச்சியான செய்தியாகும். பாதுகாப்பு ரீதியாகவும், கடல் ரீதியாகவும், ஆசிய வளர்ச்சி ரீதியாகவும் இந்தியாவிற்கு இந்த முடிவு சாதகமாக அமையும் என்பது குறிப்பிடத்தக்கது.

### லண்டனில் தீபாவளி கொண்டாட்டத்தின்போது
## தீ விபத்து ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 5 பேர் உயிரிழப்பு



**லண்டன் : நவ. 15,**

**மேற்குலண்டனில் உள்ள ஹவுன்ஸ்லோவில் உள்ள ஆப்கானிஸ்தானை சேர்ந்த குடும்பம் வசித்து வந்தது. கடந்த தீபாவளி அன்று இரவு 10.30 மணியளவில் இவர்கள் வசிக்கும் அடுக்கு மாடி குடியிருப்பில் தீடிரென தீ விபத்து ஏற்பட்டது. தீ மளமளவென இரண்டு மாடிகளுக்கும் பரவியது.**

இதில், ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 5 பேர் உயிரிழந்ததாக காவல்துறை மற்றும் தீயணைப்புத் துறையினர் தெரிவித்தனர். அந்த வீட்டில் சீமா ராத்ரா என்ற பெண் தனது மூன்று குழந்தைகளுடன் இறந்துள்ளார். விபத்தில் சிக்கி படுகாயங்களுடன் உயிர் தப்பிய குழந்தைகளின் தந்தை ஆரோன் கிஷன் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

மேலும், அதே குடும்பத்தைச் சேர்ந்த மற்றொரு நபரும் தீ விபத்தில் சிக்கி உயிரிழந்துள்ளார். தீ விபத்து குறித்து தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு தீயணைப்பு வாகனங்கள் விரைந்து தீயை கட்டுக்குள் கொண்டுவந்தனர். தீபாவளி கொண்டாட்டத்தின்போது அப்பகுதியில் அதிகளவில் பட்டாசுசத்தம் இருந்ததாகவும், அதனால் தீ விபத்திற்கு பட்டாசு வெடித்தது காரணமாக இருக்கலாம் எனவும் கூறப்படுகிறது.

இதுகுறித்து, தலைமை கண்காணிப்பாளர் சீன் வில்சன் கூறுகையில், “இதுஒரு பயங்கரமான சம்பவம். இந்த சம்பவத்தின் பின்னணியில் உள்ள காரணத்தைக் கண்டறிய லண்டன் தீயணைப்புப் படை அயராது உழைக்கும்” என்று கூறினார்.



# 240 கோடி ரூபாய்க்கு மருந்துகள் கையிருப்பில் உள்ளது: சந்தேகம் என்றால் ஆய்வுக்கு வாருங்கள்

# புதுக்கோட்டை, அன்னவாசலில் இருசக்கர வாகனத்தில் வீலிங் 2 நபர்கள் சிறையில் அடைப்பு





# அரசு வழக்கறிஞர்களை சந்திக்க வரும் போலீசாரை மரியாதையுடன் நடத்த கடிதம்


| சென்னை / புதுக்கோட்டை | 15.11.2023 | varalaruu.com | பக்கம்:6 | ரூ.10 |
|---|---|---|---|---|

புதுகை வரலாறு நாளிதழ்

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

பிர்சா முண்டா , இந்தியப் புரட்சியாளர், விடுதலைப் போராட்டப் போராளி (பி.1875) (இ.1900)



கிஜுபாய் பதேக்கா , இந்தியக் கல்வியாளர் (பி.1885) (இ.1939)



வி. ஆர். கிருஷ்ணய்யர் , இந்திய உச்சநீதிமன்ற நீதிபதி (பி.1914) (இ.2014)



ராதா பர்னியர் , சென்னை பிரம்மஞானசபை தலைவி (பி.1923) (இ.2013)



## இன்றைய நினைவு நாள்

மதுசூதன் குப்தா , இந்திய மருத்துவர் (பி.1800) (இ.1856)



வினோபா பாவே , இந்திய காந்தியவாதி (பி.1895) (இ.1982)



## தேசிய மர நடுகை நாள் (இலங்கை)